


Follow us:

# தமிழன்

THAMILAN

தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்

மலர் : 01, இதழ் : 252 பிலவ வருடம், வைகாசி மாதம் 27ஆம் திகதி வியாழக்கிழமை (10.06.2021) ஹிஜ்ரி - 1442, ஷவ்வால் பிறை - 28, 0115886187 - பக்கங்கள் 06

'தமிழன்' மின்னிதழ் பதிப்பு e-Paper

## 13 நாட்களில் கொரோனாவுக்கு 500 பேர் பலி

•யோ.தர்மராஜ்

நாட்டில் மரணங்களின் எண்ணிக்கை ஆயிரத்து 900ஐ நெருங்கியுள்ள நிலையில், முதல் 500 மரணங்கள் பதிவாகுவதற்கு 343 நாட்கள் சென்றபோது, இறுதி 500 மரணங்கள் பதிவாகுவதற்கு வெறும் 13 நாட்களே சென்றுள்ளதாக அரசாங்க மருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் மத்திய குழு உறுப்பினர் வைத்தியர் வாசன் ரட்ணசிங்கம் தெரிவித்தார். 02

## 15 வயது சிறுமி இணையம் மூலம் விற்பனை

- கல்கிசையில் 35 வயது நபர் கைது
- வாடிக்கையாளர்களை தேடி பொலிஸ் வலைவீச்சு



•நா. தினுஷா

இணையத்தின் ஊடாக 15 வயது சிறுமியை விற்பனைசெய்து வந்த நபர் ஒருவரை கல்கிசை பொலிஸார் கைதுசெய்துள்ளனர். இந்தச் சந்தேகநபர் பாலியல் தேவைக்காக சிறுமியை பயன்படுத்தி பல இலட்சம் ரூபா பணம் பெற்றுக்கொண்டுள்ளமை தெரியவந்துள்ளதுடன், இதில் முக்கியஸ்தர்கள் பலரும் அடங்குவதாக தெரியவந்துள்ளது.

மேலும், குறித்த சந்தேகநபர் இந்தச் சிறுமியின் தாயாரை தனவந்தர் ஒருவருக்கு 21 இலட்சம் ரூபாவுக்கு விற்பனை செய்துள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

கல்கிசை பகுதியில் வாடகை வீடொன்றில் வசித்துவந்த தெல்கொடை பகுதியைச் சேர்ந்த 35 வயதான நான்கு பிள்ளைகளின் தந்தையொருவரே பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

இவர் சிறுமியின் புகைப்படத்தை இணையத் தளத்தில் தரவேற்றி இலட்சக்கணக்கில் பணம் பெற்றுக்கொண்டு விற்பனை செய்துள்ளார். வாடிக்கையாளர்களுக்கு சிறுமியின் காணொளியை நேரலையில் வெளியிடுவதற்கு 10 நிமிடங்களுக்கு 10 ஆயிரம் ரூபா வரை அற விட்டுள்ளார்.

இதேவேளை, சந்தேகநபரால் சிறுமியின் தாயார் 21 இலட்சம் ரூபாவுக்கு விற்பனை செய்யப்பட்டுள்ளமையும் விசாரணைகளிலிருந்து தெரியவந்துள்ளது. இது தொடர்பில் கல்கிசை பொலிஸ் நிலைய... 02

## எக்ஸ்பிரஸ் பேர்ள் கப்பலின் 1000 தொன் கழிவுகள் சேகரிப்பு



•யோ.தர்மராஜ்

கொழும்பு துறைமுகத்திலிருந்து 9.5 கடல் மைல் தூரத்தில் தீ விபத்துக்குள்ளான எக்ஸ்பிரஸ் பேர்ள் கப்பலிலிருந்து கடலில் கலந்து கரையொதுங்கிய இரசாயனக் கழிவுகள் 10 இலட்சம் கிலோ (1000 தொன்) இதுவரை சேர்க்கப்பட்டுள்ளதாக சமூத்திர பாதுகாப்பு அதிகாரசபை தெரிவித்துள்ளது.

இவற்றை வத்தளையில் உரிமம் பெற்ற 41 கொள்கலன்களில் தற்காலிகமாக சேகரித்து வைத்துள்ளதுடன்,... 02

## பல்கலைக்கழக விண்ணப்ப காலம் நீடிப்பு

•மணிராஜ் சசிதரன்

2020 - 2021 கல்வி ஆண்டுக்கான பல்கலைக்கழக அனுமதிக்கு விண்ணப்பிப்பதற்காக வழங்கப்பட்டிருந்த கால அவகாசம் நீடிக்கப்பட்டுள்ளது.

பல்கலைக்கழக ஆணைக்குழு வெளியிட்டுள்ள விசேட அறிக்கையில் இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தக் கால எல்லை எதிர்வரும் 11ஆம் திகதி நிறைவடையவிருந்த நிலையில், இந்த விண்ணப்ப காலத்தை ஜூன் 18ஆம் திகதி வரை நீடிப்பதாக பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு அறிவித்துள்ளது.

நாட்டில் தற்போது அமுல்படுத்தப்பட்டுள்ள பயணத்தடையையும் கொவிட் நிலைமையையும் கருத்திற்கொண்டு இந்தத் தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# கொரோனா பாதிப்பு மரணங்கள் - 28% நோயாளர்கள் -12% அதிகரிப்பு

•யோ.தர்மராஜ்

கொரோனா தொற்றின் தீவிரம் காரணமாக சுகாதாரத் துறையின் கொள்ளளவு நாளுக்கு நாள் மீறிச் செல்வதால், கடந்த வாரத்தில் மரணங்களின் எண்ணிக்கை 28 வீதத்தாலும் நோயாளர்களின் எண்ணிக்கை 12 வீதத்தாலும் அதிகரித்துள்ளதாக விசேட வைத்திய நிபுணர்கள் சங்கம் ஜனாதிபதியிடம் சுட்டிக்காட்டியுள்ளது.

கொரோனா தொற்றை கட்டுப்படுத்துவதற்கு எதிர்காலத்தில் முன்னெடுக்கப்படவேண்டிய நடவடிக்கைகள் குறித்து விசேட வைத்திய நிபுணர்கள் சங்கத்தினர் ஜனாதிபதிக்கு கடிதமொன்றை அனுப்பி இதனை சுட்டிக்காட்டியுள்ளனர். 02

## ஓட்டமாவடியில் 3 கிராமங்கள் முடக்கம்




•எஸ்.எம்.எம்.முர்ஷித்

ஓட்டமாவடி பிரதேச செயலாளர் பிரிவிலுள்ள மீராவோடை கிழக்கு, மீராவோடை மேற்கு, மாஞ்சோலை ஆகிய கிராமங்கள் நேற்று முதல் மறுஅறிவித்தல்வரை தனிமைப் படுத்தப்பட்டுள்ளதாக ஓட்டமாவடி சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் எம்.எச்.எம்.தாரிக் தெரிவித்தார்.

ஓட்டமாவடி சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் கொரோனா நோயாளிகள் அதிகரித்து காணப் படுவதுடன், மரணங்களும் ஏற்பட்டுள்ள நிலையில், வைத்திய அதிகாரி அலுவலகத்தில் நேற்று புதன் கிழமை அவசர கூட்டம் இடம்பெற்ற போதே மேற்படி தீர்மானம் நிறை 02

## இராணுவ வாகனத்தில் மதுபானம் கடத்தல்

### அனுராதபுர சதொசவில் சம்பவம்

•யோ.தர்மராஜ்

பயணக்கட்டுப்பாடு அமுல்படுத்தப்பட்டுள்ளதால் நாட்டிலுள்ள அனைத்து மதுபான நிலையங்களும் மூடப்பட்டு, சீல் வைக்கப்பட்டுள்ள நிலையில் அனுராதபுரத்தில் சதொசவிலுள்ள மதுபான விற்பனைப் பிரிவை உடைத்து 16 இலட்சம் பெறுமதியான 500 போத்தல்கள் பலவந்தமான முறையில் கொண்டு செல்லப்பட்டுள்ளன.

இந்நிலையில், இச்சம்பவம் தொடர்பாக பல சந்தேகங்கள் எழுந்துள்ளதாகக் கூறப்படுகின்றது. 02

## முல்லைத்தீவில் மணல் அகழ்வு: ட்ரோன் கெமராக்களில் ஆராய்வு

•கே .குமணன்

முல்லைத்தீவில் மணல் அகழ்வு இடம்பெற்றுவரும் பகுதிகளில் இலங்கை விமானப்படையின் ட்ரோன் அணி நேற்று கண்காணிப்பை மேற்கொண்டது.

யாழ். ஆயர் இல்லத்துக்கு சொந்தமான முல்லைத்தீவு உப்புமாவெளி பகுதியில் உள்ள மணல் திட்டு நிலங்களிலும் அதனை அண்டிய பகுதிகளிலும் சட்டவிரோதமாக மேற்கொள்ளப்பட்டு வரும் மணல் அகழ்வு நடவடிக்கைகள் குறித்து கண்காணிக்கும் நோக்கோடு பொலிஸாரும் விமானப்படையினரும் இணைந்து கண்காணிப்பை மேற் கொண்டுள்ளனர். 02



## ரஷ்ய உதவிகளுக்கு இலங்கை பாராட்டு

### இருநாட்டு வெளியுறவு அமைச்சர்களும் தொலைபேசியில் உரையாடல்


ரஷ்யக் கூட்டமைப்பின் வெளிநாட்டு உறவுகள் அமைச்சர் செர்ஜி லாவ்ரோவ் உடன் கடந்த 7ஆம் திகதி இடம்பெற்ற தொலைபேசி உரையாடலின்போது, கொவிட்-19 தொற்றுநோயால் ஏற்பட்டுள்ள சவால்களை எதிர்கொள்வதில் இலங்கைக்கு ரஷ்யா நல்கிய... 02






## வவுனியா பல்கலைக்கழகமாக யாழ். பல்கலையின் வளாகம் மாற்றம்

### கல்வி அமைச்சரால் விசேட வர்த்தமானி வெளியீடு



•சிவகுமார் திவ்யா

யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தின் வவுனியா வளாகம், 'இலங்கை வவுனியா பல்கலைக்கழகம்' என அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல் மூலம் பிரகடனப்படுத்தப் பட்டுள்ளது.

கல்வி அமைச்சர் பேராசிரியர் ஜி.எல்.பீரிஸின் கையொப்பத்துடன், இதுதொடர்பான அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல் நேற்று முன்தினம் வெளியிடப்பட்டுள்ளது.

இதன்படி, யாழ்ப்பாண பல்கலைக் கழக வவுனியா வளாகம் என்ற பெயர், எதிர்வரும் ஜூலை மாதம் 31ஆம் திகதியுடன் நீக்கப்பட்டு, ஓகஸ்ட் மாதம் முதலாம் திகதிமுதல் 'இலங்கை வவுனியா பல்கலைக்கழகம்' என்ற பெயர் அமுலாகும் என வர்த்தமானியில் குறிப்பிடப்பட்டுள்ளது. 02

## உயர்நீதிமன்ற நீதியரசராக அர்ஜுன ஒபேசேகர

### ஜனாதிபதியின் பரிந்துரைக்கு நாடாளுமன்றப் பேரவை இணக்கம்

•நா. தினுஷா

மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் தலைமை நீதிபதி அர்ஜுன ஒபேசேகரவை உயர் நீதிமன்றத்தின் நீதியரசராக நியமிப்பதற்கு ஜனாதிபதி மேற்கொண்ட பரிந்துரைக்கு நாடாளுமன்றப் பேரவை இணக்கம் தெரிவித்துள்ளது.

உயர் நீதிமன்றத்தின் நீதியரசர் சிசிர ஜே.டி.ஆப்ரூ ஓய்வுபெற்றதைத் தொடர்ந்து ஏற்பட்ட வெற்றிடத்துக்கே ஜனாதிபதி இந்தப் பரிந்துரையை மேற்கொண்டிருந்தார்.

சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன தலைமையில் நேற்று... 02

# கர்ப்பிணிகளுக்கு நேற்றுமுதல் தடுப்பூசியேற்றும் திட்டம் அமுல்



படப்பிடிப்பு : லலித் பெரேரா

***யோ.தர்மராஜ்***

இலங்கையில் முதல் தடவையாக கர்ப்பிணித் தாய்மார்களுக்கு கொரோனா தடுப்பூசி வழங்கும் திட்டம் நேற்று (09) ஆரம்பிக்கப்பட்டது.

அதன்படி, பிலியந்தலை சுகாதார வைத்திய அதிகாரி பிரிவை மையமாகக் கொண்டு இந்த நடவடிக்கை முன்னெடுக்கப்படவுள்ளதுடன், சீனாவில் தயாரிக்கப்பட்ட சினோபார்ம் தடுப்பூசியே கர்ப்பிணித் தாய்மார்களுக்கு வழங்கப்பட்டது.

இதன் முதல் கட்டமாக உயர் குருதி அழுத்தம், நீரிழிவு உள்ளிட்ட தொற்றா நோயினால் பாதிக்கப்பட்டுள்ள கர்ப்பிணி தாய்மார்களுக்கு தடுப்பூசிகள் செலுத்தப்பட்டன. அதன் இரண்டாம் கட்டத்தின் போது ஏனைய கர்ப்பிணி தாய்மார்களுக்கு சினோபார்ம் தடுப்பூசிகள் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, கர்ப்பிணித் தாய்மாரின் விருப்பத்திற்கேற்ப தடுப்பூசி செலுத்தப்படும் எனவும் சுகாதார அதிகாரிகள் தெரிவித்தனர்.

கொரோனா தொற்றுக்குள்ளாகிய கர்ப்பிணித் தாய்மார் பலர், கடந்த சில நாட்களில் உயிரிழந்த நிலையில், கர்ப்பிணி தாய்மார்களுக்கும் தடுப்பூசிகளை செலுத்த வேண்டும் என சுகாதார அமைச்சு தீர்மானமொன்றை எடுத்தமைக்கு அமையவே இந்த தடுப்பூசி செலுத்தும் திட்டம் ஆரம்பிக்கப்பட்டது.

இதேவேளை, நாடு முழுவதிலும் தற்போது 2 இலட்சத்து 76 ஆயிரம் கர்ப்பிணித் தாய்மார்கள் உள்ளனர். இவர்களுக்கு தடுப்பூசி ஏற்றும் வேலைத்திட்டம் பிலியந்தலை சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகத்திலும், கொழும்பு காசல் வீதி பெண்கள் வைத்தியசாலையிலும் இடம்பெறும் என பிரசவ விசேட வைத்தியர்கள் நிலையத்தின் தலைவர் விசேட வைத்தியர் பிரதீப் டி சில்வா தெரிவித்துள்ளார்.

# 100 நகரங்களை அபிவிருத்திசெய்யும் திட்டத்தில் திருகோணமலையில் 4 பிரதேசங்கள் தெரிவு

***அப்துல்சலாம் யாசீம்***

நகர அபிவிருத்தி அதிகார சபையினால் திருகோணமலை மாவட்டத்தில் 4 பிரதேசங்கள் நகர அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் அபிவிருத்தி செய்யப்படவுள்ளதாக கிழக்கு மாகாண நகர அபிவிருத்தி அதிகார சபை தெரிவித்துள்ளது.

நகர அபிவிருத்தி கரையோர பாதுகாப்பு கழிவுப்பொருள் அகற்றுகை மற்றும் சமுதாய தூய்மைப்படுத்துதல் இராஜாங்க அமைச்சினால் மேற்கொள்ளப்படவுள்ள 100 நகரங்களை அபிவிருத்திசெய்யும் திட்டத்தின் கீழ் திருகோணமலை மாவட்டத்தில் கந்தளாய், பதவிசிறிபுர, புல்மோட்டை மற்றும் சேருவில போன்ற பிரதேசங்கள் அபிவிருத்தி செய்யப்படவுள்ளதாக கிழக்கு மாகாண நகர அபிவிருத்தி அதிகார சபையின் அத்தியட்சகர் எல்.ஜே.லியனகே தெரிவித்தார்.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் அறிவுறுத்தலுக்கு அமைவாக நாட்டில் 100 நகரங்களை அபிவிருத்தி செய்யும் திட்டத்தின் கீழ் இவ்வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்பட உள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

மேலும், திருகோணமலை மாவட்டத்தில் நான்கு பிரதேசங்களை அபிவிருத்திசெய்ய நடவடிக்கை எடுக்குமாறு திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் கபில புலன் அத்துகோரளவினால் ஜனாதிபதியிடம் விசேட வேண்டுகோள் விடுக்கப்பட்டதையடுத்து, திருகோணமலை மாவட்டத்தில் 4 பிரதேசங்கள் தெரிவுசெய்யப்பட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. இத்திட்டம் தொடர்பிலான அனுமதி கிடைத்தமை தொடர்பிலான கடிதங்களின் பிரதிகளை மாவட்ட அரசாங்க அதிபர், திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஆகியோருக்கு அனுப்பி வைத்துள்ளார்.

## 15 வயது சிறுமி...

பரிசோதகர் திலீப பெரேராவுக்கு கிடைக்கப்பெற்ற இரகசிய தகவலுக்கமைய சந்தேகநபர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

சந்தேகநபருடன் தொடர்புகளைப் பேணிய வாடிக்கையாளர்களில் முக்கியஸ்தர்கள் பலர் இருப்பதாகவும், அவர்களை கைதுசெய்வதற்கான நடவடிக்கைகளை ஆரம்பித்துள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

சந்தேக நபர் கல்கிஸை நீதவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்ட பின்னர் இம்மாதம் 22ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

இதேவேளை, இணையத்தளம் ஊடாக இவ்வாறான குற்றச் செயல்களில் ஈடுபடுவோரை கைதுசெய்வதற்கு விசேட விசாரணைகள் இடம்பெற்றுவருவதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர், பிரதிப் பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹண தெரிவித்தார்.

## எக்ஸ்பிரஸ் பேர்ள்...

ஏனையவை பைகளில் சேகரிக்கப்பட்டு கடற்கரையில் வைக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவித்துள்ளது.

கடற்கரையில் சேரும் குறித்த இரசாயன கழிவுகளை இன்று முதல் கொள்கலன் வைக்கப்பட்டுள்ள இடத்திற்கு கொண்டு வருவதாகவும், அதன் பிறகு கழிவுகளை மட்டும் பிரிப்பதற்கு நடவடிக்கையெடுப்பதாகவும் சமுத்திர பாதுகாப்பு அதிகார சபை தெரிவித்துள்ளது.

## முல்லைத்தீவில்...

ஆயர் இல்லத்துக்கு சொந்தமான காணியில் ஆயிரக்கணக்கான லோட் மண் அகழப்பட்டு குவித்து வைக்கப்பட்டுள்ள நிலையில், ஏற்கனவே ஊடகங்கள் வாயிலாக இந்த விடயம் வெளிப் படுத்தப்பட்டதைத் தொடர்ந்து முல்லைத்தீவு பொலிஸார் நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்துள் ளனர். இந்த நிலையிலேயே மேலதிகமாக அந்த பகுதிகளில் கண்காணிப்பை மேற்கொள்ளும் நோக்கோடு இந்த நடவடிக்கை முன்னெடுக்கப்பட் டுள்ளது.

## வவுனியா...

உள்நாட்டு மூலவள அடிப்படையினுள் விழுமியத்தை உருவாக்குதல் பற்றி மாணவர்களுக்குக் கல்வி புகட்டுவதன் மீது, இந்தப் பல்கலைக்கழகம் கூடுதலான அழுத்தத்தைக் கொண்டிருத்தல் வேண்டும் என்று வர்த்தமானியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## ரஷ்ய உதவிகளுக்கு...

ஆதரவுகளுக்காக வெளிநாட்டு அமைச்சர் தினேஷ் குணவர்தன பாராட்டுகளைத் தெரிவித்தார்.

இது சம்பந்தமாக, இலங்கையின் நாடு தழுவிய தடுப்பூசித் திட்டத்திற்கு ஆதரவுகளை வழங்கும் முகமாக, ஸ்புட்னிக்-வி தடுப்பூசியை அணுகிக் கொள்வதற்கான ரஷ்யாவின் உதவி மற்றும் தடுப்பூசியைத் தயாரிப்பதில் சம்பந்தப்பட்ட தொற்றுநோயியல் மற்றும் உயிரியியல் தொழில்நுட்ப நிறுவனங்களுக்கிடையிலான தற்போதைய ஒத்துழைப்பு ஆகியவற்றை வெளிநாட்டு அமைச்சர் குணவர்தன வரவேற்றார்.

மனித உரிமைகள் பேரவை உட்பட பல்தரப்பு அரங்குகளில் இலங்கைக்கு வழங்கப்பட்ட ஆதரவுகளுக்காக, ரஷ்யாவுக்கான இலங்கையின் பாராட்டுக்களை வெளிநாட்டு அமைச்சர் மீண்டும் வலியுறுத்தினார்.

இரு வெளிநாட்டு அமைச்சுக்களினதும் கட்டமைப்பிற்குள் திட்டமிடப்பட்டுள்ள இருதரப்பு ஆலோசனைகள் மற்றும் அரசாங்கங்களுக்கிடையிலான வர்த்தக, பொருளாதார, விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப ஒத்துழைப்புக்கான ஆணைக்குழு ஆகியன குறித்தும் இதன்போது கலந்துரையாடப்பட்டன.

## இராணுவ வாகனத்தில்...

அதன்படி, அனுராதபுரத்திலுள்ள சதொசவின் உயர் அதிகாரி மற்றும் மதுவரி திணைக்கள அதிகாரிகளுக்குத் தெரிந்தே இந்த விடயம் நடந்துள்ளதாக விசாரணைகளிலிருந்து தெரியவந் துள்ளதாக கூறப்படுகின்றது.

இச்சம்பவம் கடந்த 8 ஆம் திகதி இடம்பெற்றுள் ளது. இந்த போத்தல்கள் இராணுவத்திற்குச் சொந்தமான சிவப்பு நிற வாகனத்திலேயே கொண்டு செல்லப்பட்டுள்ளதாகவும் தெரியவருகிறது. சம்பவம் தொடர்பில் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

# எஸ்ட்ராசெனிகா தடுப்பூசிகளைப் பெற்றுத்தருமாறு ஜனாதிபதி விடுத்த கோரிக்கைக்கு ஜப்பான் சாதகமான பதில்

ஆறு இலட்சம் எஸ்ட்ராசெனிகா தடுப்பூசிகளைப் பெற்றுத்தருமாறு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, ஜப்பான் பிரதமர் யொசிஹிடே சுகாவிடம் முன்வைத்த கோரிக்கைக்குச் சாதகமான பதில் கிடைக்கப்பெற்றுள்ளது.

ஜனாதிபதிக்கும் இலங்கைக்கான ஜப்பானியத் தூதுவர் சுகியாமா அக்கிராவுக்குமிடையில், நேற்று (09) முற்பகல் ஜனாதிபதி அலுவலகத்தில் இடம்பெற்ற சந்திப்பின்போதே இதுபற்றி தெரிவிக்கப்பட்டது.

கொவிட் வைரஸ் தொற்றொழிப்பு, மருத்துவ மற்றும் சுகாதாரப் பாதுகாப்பு உபகரணங்களைப் பெற்றுக்கொள்வது தொடர்பில் ஜனாதிபதி முன்வைத்த கோரிக்கைக்கு ஜப்பான் அரசாங்கம் இணக்கம் தெரிவித்துள்ளது. சமுத்திர அனர்த்தம் தொடர்பில் விரைவாகப் பதிலளிப்பதற்குத் தேவையான தொழில்நுட்ப உதவிகளைப் பெற்றுக்கொள்வது தொடர்பிலும் ஜனாதிபதி, ஜப்பான் தூதுவரின் கவனத்துக்குக் கொண்டுவந்தார்.

ஜப்பானியத் தூதுவர் அலுவலகத்தின் பிரதித் தூதுவர் கித்தமுரா டொசிகிரோ, முதலாவது செயலாளர் இமமுரா காயோ, ஜனாதிபதியின் செயலாளர் பி.பீ.ஜயசுந்தர, ஜனாதிபதியின் தலைமை ஆலோசகர் லலித் வீரதுங்க மற்றும் வெளிநாட்டமைச்சின் செயலாளர் அட்மிரல் ஜயநாத் கொலம்பகே ஆகியோரும் இச்சந்திப்பின்போது கலந்துகொண்டிருந்தனர்.

# எம்.பி.யாகிறார் ஞானசார தேரர்

***மணிராஜ் சசிதரன்***

நாடாளுமன்ற உறுப்பினர் அதுரலிய ரத்ன தேரர் தனது பதவியை இராஜினாமா செய்த பின்னர் எங்கள் மக்கள் சக்தியின் தேசியப்பட்டியல் நாடாளுமன்ற உறுப்பினராக ஞானசார தேரர் நியமிக்கப்படுவார் என அறிவிக்கப்பட்டுள்ளது.

ரத்ன தேரர் நாடாளுமன்ற உறுப்பினராக இருக்க மூன்று மாதங்கள் மட்டுமே கோரியதாகவும், இருப்பினும் 6 மாதங்களுக்கு அனுமதி வழங்கப் பட்டதாகவும் பின்னர் தனது பதவியை ஞானசார தேரரிடம் ஒப்படைக்க சம்மதித்தார் என்றும் அக்கட்சியின் தலைவர் தெரிவித்துள்ளார்.

கடந்த ஆண்டு ஒகஸ்ட் 5 ஆம் திகதி நடைபெற்ற நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிட்ட ஞானசார தேரரின் கட்சி, மொத்தம் 67,758 வாக்குகளைப் பெற்று தேசியப்பட்டியல் ஆசனத்தை பெற்றுக்கொண்டது. கடந்த ஆண்டு கம்பஹா மாவட்டத்தில் போட்டி யிட்ட அதுரலிய ரத்தன தேரர், அக்கட்சியின் தேசியப்பட்டியல் நாடாளுமன்ற உறுப்பினராக ஜனவரி 5 ஆம் திகதி பதவியேற்றார்.

இந்நிலையில் அவர் பதவியேற்று எதிர்வரும் ஜூலை 5 அன்று 6 மாதங்கள் முடிவடையும் நிலையில், அவர் பதவி விலகியதும் ஞானசார தேரரை நாடாளுமன்ற உறுப்பினராக நியமிக்க கட்சி தயாராகி வருவதாக எங்கள் மக்கள் சக்தியின் தலைவர் தெரிவித்துள்ளார்.

பிரகீத் எக்னலிகொட கடத்தப்பட்டு காணாமல் ஆக்கப்பட்ட சம்பவம் தொடர்பான விசாரணையின்போது எக்னலிகொடவின் மனைவி சந்தியாவை நீதிமன்ற வளாகத்துக்குள் வைத்து அச்சுறுத்தியமைக்காக ஞானசார தேரர் கைதுசெய்யப்பட்டார். இக்குற்றச்சாட்டு தொடர் பான வழக்கு நீதிமன்றத்தில் விசாரணைக்கு எடுத்துகொள்ளப்பட்டபோது ஞானசார தேரர் நீதிமன்றத்தை அவமதிக்கும் விதத்தில் செயற்பட்டார் என தெரிவித்து அவருக்கு 6 வருடங்கள் ஒத்திவைக்கப்பட்ட 19 வருட கடூழிய சிறைத்தண்டனை வழங்கப்பட்டது. இந்நிலையில் கடந்த 2019 ஆம் ஆண்டு ஜனாதிபதி தேர்தல் இடம்பெறுவதற்கு முன்னர் முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவினால் அவருக்கு பொதுமன்னிப்பு வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

## 13 நாட்களில்...

கொழும்பிலுள்ள அரசாங்க மருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் மத்திய நிலையத்தில் நேற்று இடம்பெற்ற விசேட செய்தியாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில், கொரோனா தொற்றினால் மரணங்களின் எண்ணிக்கை மிக வேகமாக அதிகரித்துவருகின் றன. நாட்டில் மரணங்களிள் எண்ணிக்கையும் ஆயிரத்து 900 ஐ நெருங்கியுள்ளது. இந்த நிலையில், முதல் 500 மரணங்கள் பதிவாகுவதற்கு 343 நாட்களும், இரண்டாவது 500 மரணங்கள் பதிவாகுவதற்கு 72 நாட்களும் சென்ற நிலையில், மூன்றாவது 500 மரணங்கள் பதிவாகுவதற்கு வெறும் 13 நாட்களே சென்றுள்ளன. அதற்கமைய, கொரோனா தொற்று பரவும் வேகம் அதிகரிப் பதால் கூடிய மரணங்கள் பதிவாகுவதற்கு குறைந்தளவான நாட்களே செல்கின்றன.

மேலும், கொரோனா தொற்று ஆரம்பத்திலிருந்து பதிவாகிய 2020 மார்ச் தொடக்கம் 2021 ஏப்ரல் வரையான காலப்பகுதியில் பதிவாகிய மரணங்களின் வீதம் 46.6 ஆக காணப்படுகின்றன. ஆனால், மே மாதத்தில் மாத்திரம் பதிவாகிய மரணங்களின் வீதம் 53.4 ஆக காணப்படுகின்றன. ஆகவே, இலங்கையில் மே மாதத்தில் மாத்திரமே அதிக மரணங்கள் பதிவாகியுள்ளன.

அதன்படி, மே மாதத்தில் பதிவாகிய மரணங்க ளையும் அதன் வீதத்தையும் வாரத்தின் அடிப்படை யில் பார்க்கும் போது, முதல் வாரத்தில் 86 (12.3 வீதம்) மரணங்களும் இரண்டாவது வாரத்தில் 187 (23.4 வீதம்) மரணங்களும் மூன்றாவது வாரத்தில் 212 (30.3 வீதம்) மரணங்களும் நான்காவது வாரத்தில் 234 (33.4 வீதம்) மரணங்களும் ஐந்தாவது வாரத்தில் 293 (41.9 வீதம்) மரணங்களும் பதிவாகியுள்ளன. வாரத்துக்கு வாரம் மரணங்களின் எண்ணிக்கை வேகமாக அதிகரித்துவருகின்றது.

இதேவேளை, சுகாதார அமைச்சின் தொற்று நோயியல் பிரிவின் தகவல்களுக்கு அமைய கடந்த ஜூன் 6 ஆம் திகதி வரை வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுவந்தவர்களின் எண்ணிக்கை 36 ஆயிரத்து 333 ஆக காணப்படுகின்றன. ஆனால், ஜூன் 7 ஆம் திகதி இந்த நோயாளர்களின் எண்ணிக்கை 30 ஆயிரத்து 145 ஆக குறைந்துள்ளது. எனினும், வைத்தியசாலையிலிருந்து குணமடைந்து வீடு சென்றவர்களின் எண்ணிக்கை ஆயிரத்து 172 ஆக காணப்படுகின்றன. அவ்வாறாயின் 5 ஆயிரத்து 16 பேர் எங்கு சென்றுள்ளனர், இவர்களுக்கு என்ன நடந்தது என்பது குறித்து எவ்வித தகவல்களும் இல்லை.இதேவேளை, மரணங்கள் ஏற்படும் வீதமானது இலங்கையில் ஒரு மில்லியன் மக்களுக்கு 1.19 ஆக காணப்படுகின்றது. இந்தியாவின் நிலையானது ஒரு மில்லியன் மக்களுக்கு 2.11 ஆக காணப்படுகின்றது. இந்தியாவில் அதிக மரணங்கள் ஏற்பட்டிருந்தாலும் இந்தியாவின் மரண வீதத்தை இலங்கை அண்மித்துக் கொண்டிருக்கின்றது. இது மிக ஆபத்தானதாகவே காணப்படுகின்றது.

மேலும், கொரோனா நோயாளர்கள் அடை யாளம் காணப்படுவதில் இந்தியாவில் ஒரு வாரத்தில் ஒரு மில்லியன் மக்களுக்கு 85 பேர் அடையாளம் காணப்படுகின்றனர். ஆனால், இலங்கையில் ஒரு வாரத்திற்கு ஒரு மில்லி யன் மக்களுக்கு 138 பேர் அடையாளம் காணப்படுகின்றனர். அதாவது சனத்தொகை அடிப்படையில் பார்க்கும்போது இலங்கை ஆபத்தான நிலையிலேயே காணப்படுகின்றது. எண்ணிக்கையில் குறைவாக இருந்தாலும் சனத்தொகை அடிப்படையில் இந்தியாவை விட இலங்கை ஆபத்தான நிலைலேயே இருக்கின்றது – என்றார்.

## கொரோனா பாதிப்பு...

அந்த கடிதத்தில் மேலும் தெரிவித்துள்ளதாவது, இரண்டாம் கட்ட எஸ்ட்ராசெனிகா தடுப்பூசிக்குத் தேவையான 6 இலட்சம் தடுப்பூசிகளைப் பெற்றுக்கொள்வதற்கு தேவையான நடவடிக்கைகளில் அதிகம் கவனம் செலுத்தி குறிப்பட்ட காலத்தில் பெற்றுக்கொள்ள வேண்டும் என்பதோடு, அவ்வாறு அது வெற்றியளிக்காத பட்சத்தில் அதற்கு மாற்றாக முன்னெடுக்க வேண்டிய நடவடிக்கைகள் குறித்தும் அவதானம் செலுத்த வேண்டும். அது தொடர்பாக விசேட வைத்திய ஆலோசனைகளை உடடியாக பெற்றுக்கொள்ள வேண்டும். மாறாக, காலதாமதம் ஏற்படும் பட்சத்தில் புதிய திரிபுகளிடமிருந்து பாதுகாப்பை பெற்றுக்கொள்ள முடியாத நிலையில் புதிய திரிபுகள் வேகமாக பரவுவதற்கு முன்னர் இவற்றை முன்னெடுக்க வேண்டும்.

எதிர்காலத்தில் வழங்குவதற்கு திட்டமிடப்பட் டுள்ள ஏனைய தடுப்பூசிகளின் இரண்டாம் கட்ட தடுப்பூசிகளையும் பெற்றுக்கொள்வதற்கு தேவையான தொகைகளை தட்டுப்பாடுகளிலின்றி பெற்றுக்கொள்ள முடியும் என்பதை உறுதிப்படுத்த வேண்டும். அதன் பின்னரே முதல் தடுப்பூசியை பெற்றுக்கொள்பவர்கள் குறித்த பட்டியலை தயாரிக்க வேண்டும். இந்த பட்டியலை தயாரிக்கும் போது ஒரு தரப்பினருக்கு மாத்திரம் முக்கியத்துவம் கொடுக்காது, சுகாதார துறையினருக்கு தடுப்பூசி வழங்கும்போது அவர்களின் குடும்பங்கள் மற்றும் அவர்களின் நெருங்கியவர்களுக்கும் முக்கியத்துவம் கொடுப்பதால் சுகாதார முறையினரின் சேவை களை தடையின்றி பெற்றுக் கொள்ள முடியும்.

விசேட வைத்திய நிபுணர்களின் தீர்மானத்திற் கும் அமைய வைத்தியசாலைகளுக்கு வருதை தந்து சிகிச்சை பெறுவோருக்கும் தடுப்பூசி வழங்க வேண்டும் என்றால் அதற்கு தேவையான தடுப் பூசிகளை அரச வைத்தியசாலைகளுக்கும் பெற்றுக் கொடுக்க வேண்டும்.

தடுப்பூசிகள் வழங்கலின் போது முறையான, தெளிவான முறையில் திட்டங்களை நடை முறைப்படுத்த வேண்டும். இதனை மக்களுக்கு தெளிவுபடுத்துவதின் ஊடாக மக்களின் ஒத்து ழைப்புகளையும் பெற்றுக் கொள்ள முடியும். இந்த செயற்பாடு சுகாதார அமைச்சின் மேற்பார்வையின் கீழ் முன்னெடுக்கப்பட வேண்டும் என்பதோடு, சட்டம் மற்றும் ஒழுங்கை பாதுகாப்பதற்கு தேவை ஏற்படின் பொலிஸ் உள்ளிட்ட ஏனைய பாதுகாப்புத்துறையினரின் ஆதரவையும் சுகாதார துறைக்கு வழங்க வேண்டும். தனிமைப்படுத்தல் சட்டங்களை யாரும் மீறுவதற்கு இடமளிக்கக் கூடாது.

இதேவேளை, தற்போது நாட்டில் அமுல் படுத்தப்பட்டுள்ள பயணக்கட்டுப்பாட்டின் பிரதிபலனை பெற்றுக்கொள்வதற்கு அதனை மேலும் கடுமையாக அமுல்படுத்த வேண் டியது அவசியமாகும். நாளுக்கு நாள் வைத்திய சாலைகளின் கொள்ளளவை மீறிச் செல்லும் அளவிற்கு கொரோனா நோயாளர்களின் எண்ணிக்கையும், நோயாளர்களுக்கு சிகிச்சை யளிப்பதற்கு தேவைப்படும் ஒட்சிசன் தேவையும் அதிகரித்துவருவது உறுதியாகியுள்ளது.

மேலும், தற்போது வெளிவருகின்ற சுகாதார அறிக்கையின்படி கடந்த வாரத்தில் நோயாளர்களின் எண்ணிக்கையில் 12 வீத அதிகரிப்பையும், கொரோனா மரணங்களின் எண்ணிக்கையில் 28 வீத அதிகரிப்பையும் காண முடிந்தது. இதனால் எங்களுடைய சுகாதாரத்துறையின் சிகிச்சை திறனை குறைப்பது தெளிவாகின்றது. இந்த அனைத்து விடயங்களையும் கவனத்தில் கொண்டு எதிர்காலத்தில் முன்னெடுக்க வேண்டிய நடவடிக்கைகளுக்கு நாங்களும் ஏனைய சங்கங்களும் இணைந்து உங்களுடன் பேச்சுவார்த்தை நடத்துவதற்கு சந்தர்ப்பத்தை ஏற்படுத்தித் தாருங்கள் எனத் தெரிவிக்கப் பட்டுள்ளது.

## உயர்நீதிமன்ற...

முன்தினம் (08) நடைபெற்ற நாடாளுமன்ற பேரவைக் கூட்டத்திலேயே இதற்கான இணக்கம் தெரிவிக்கப்பட்டது.

பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ, கடற்றொழில் மற்றும் நீரியல்வளத்துறை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா மற்றும் கபீர் ஹாசிம் எம்.பி.ஆகியோர் இக்கூட்டத்தில் கலந்துகொண்டனர்.

அதேநேரம், மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் தற்போதைய தலைவர் உயர் நீதிமன்றத்தின் நீதியரசராக நியமிக்கப்படுவதால், மேன்முறை யீட்டு நீதிமன்றத்தின் தலைவர் பதவியில் ஏற்படும் வெற்றிடத்துக்கு நீதிபதி கே.பி.பெர்னாண்டோவை நியமிப்பதற்கு ஜனாதிபதி முன்வைத்த பரிந்துரைக் கும் நாடாளுமன்ற பேரவை இணக்கம் தெரிவித்தி ருப்பதாக நாடாளுமன்ற செயலாளர் நாயகம் தம்மிக தஸநாயக தெரிவித்தார்.

அதேநேரம், நீதிபதி கே.பி.பெர்னாண்டோ மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் தலைவர் பதவிக்கு நியமிக்கப்படுவதால் ஏற்படும் வெற்றிடத்துக்கு மேல் நீதிமன்றத்தின் நீதிபதி சஷி மஹேந்திரனை நியமிப்பது தொடர்பில் ஜனாதிபதி முன்வைத்த பரிந்துரைக்கும் அரசியல மைப்புப் பேரவை தனது இணக்கத்தைத் தெரிவித் திருப்பதாக செயலாளர் நாயகம் குறிப்பிட்டார்.

அதேநேரம், நீதிச் சேவைகள் ஆணைக்குழு வின் உறுப்பினர் பதவியில் ஏற்படும் வெற்றிடத்துக்கு உயர் நீதிமன்ற நீதியரசர் எல்.ரி.பி.தெஹிதெனியவை நியமிப்பதற்கும் இங்கு இணக்கம் காணப்பட்டதாக நாடாளுமன்ற செயலாளர் நாயகம் மேலும் தெரிவித்தார்.

## ஓட்டமாவடியில்...

ஓட்டமாவடி பிரதேச செயலாளர் பிரிவிலுள்ள மீராவோடை கிழக்கு, மீராவோடை மேற்கு, மாஞ்சோலை ஆகிய கிராமங்களில் அதிக கொரோனா தொற்றாளர்கள் இனங்காணப்பட்ட நிலையிலும், நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை இரவு கொரோனா தொற்றினால் ஒரு மரணமும் இடம்பெற்றுள்ளது. இதன் பிரகாரம் குறித்த பகுதிகள் தனிமைப்படுத்தல் பிரதேசமாக பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது.

அத்தோடு தனிமைப்படுத்தல் பிரதேசத்தில் உள்ள மக்களுக்கு ஓட்டமாவடி பிரதேச செயலகம் ஊடாக அத்தியாவசியப் பொருட்கள் வழங்க நடவடிக்கை எடுக்கப்படும் என்றும், குறித்த பகுதி மக்கள் தனிமைப்படுத்தலினை மீறாது வீடுகளில் இருந்து கொள்ளுமாறும் ஓட்டமாவடி சுகாதார வைத்திய அதிகாரி டொக்டர் எம்.எச்.எம்.தாரிக் தெரிவித்தார். ஓட்டமாவடி சுகாதார வைத்திய அதிகாரி டொக்டர் எம்.எச்.எம்.தாரிக் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் ஓட்டமாவடி பிரதேச செயலாளர் வீ.தவராஜா, ஓட்டமாவடி பிரதேச சபை செயலாளர் எஸ்.எம்.சிஹாப்தீன், மேற்பார்வை பொதுச் சுகாதார பரிசோதர் ஏ.எல்.நௌபர், வாழைச்சேனை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி தனஞ்சய பெரமுன, கும்புறுமூலை இராணுவ அதிகாரி, பொதுச் சுகாதார பரிசோதகர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர். கடந்த சனிக்கிழமை 133 பேருக்கு மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர்.பரிசோதனை முடிவுகள் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை மாலை கிடைக்கப்பட்டதன் பிரகாரம் தொற்றுக்குள்ளான 29 பேர் ஓட்டமாவடி சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் அடையாளம் காணப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# ஓய்வுபெற்ற தாதியர்களை ஒப்பந்த அடிப்படையில் மீண்டும் சேவையில் இணைத்துக்கொள்ளுங்கள்

## அமைச்சர் பவித்ரா வன்னியாராச்சிக்கு பிரதமர் ஆலோசனை





ஓய்வுபெற்ற தாதியர்களை தேவைக்கேற்ப ஒப்பந்த அடிப்படையில் மீண்டும் சேவையில் இணைத்துக்கொள்ளுமாறு பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ நேற்று அலரி மாளிகையில் சுகாதார அமைச்சர் பவித்ரா வன்னியாராச்சிக்கு ஆலோசனை வழங்கினார்.

தாதியர் சேவையில் காணப்படும் பிரச்சினைகள் தொடர்பில் கலந்துரையாடுவதற்கு பொது சேவை ஐக்கிய தாதியர் சங்கத்தின் தலைவர், மேல் மாகாண பிரதான சங்கநாயக்கர் முறுத்தெட்டுவே ஆனந்த தேரரின் வேண்டுகோளுக்கமையவே இந்தக் கலந்துரையாடல் இடம்பெற்றிருந்தது.

நாடளாவிய ரீதியில் சுமார் 34 ஆயிரம் தாதியர்கள் இதுவரை தாதியர் சேவையில் ஈடுபட்டுள்ளதுடன், அவர்கள் இதுவரை முகங்கொடுத்துள்ள குறுகிய மற்றும் நீண்டகால தீர்வு காணல் மற்றும் முன்மொழிவுகள் குறித்து கலந்துரையாடுவதே இச்சந்திப்பின் நோக்கமாக அமைந்திருந்தது.

இதன்போது தாதியர்களுக்கு வழங்கப்படும் கொடுப்பனவுகள் மற்றும் வசதிகளை மேம்படுத்துவது தொடர்பில் முறுத்தெட்டுவே ஆனந்த தேரர் கருத்து தெரிவித்தார்.

கொத்தலாவலை பாதுகாப்பு பல்கலைக்கழகம் மற்றும் நெவில் பெர்னாண்டோ வைத்திய சாலையின் தீவிர சிகிச்சை பிரிவுக்கு பயிற்சி பெறாத தாதியர்கள் இணைத்துக்கொள்ளப் படுகின்றமை குறித்து வணக்கத்துக்குரிய தேரர் இதன்போது சுட்டிக்காட்டினார்.

அது தொடர்பில் கருத்து தெரிவித்த சுகாதார அமைச்சர் பவித்ரா வன்னியாராச்சி,

தற்போது ஓராண்டுக்கு பயிற்சிக்காக 2 ஆயிரம் எனும் குறைந்த எண்ணிக்கையிலான தாதியர்கள் மாத்திரம் இணைத்துக் கொள்ளப் படுவதனாலேயே இந்த நிலைமை ஏற்பட்டுள்ளதாக சுட்டிக்காட்டினார்.

அதற்கமைய, தற்போது அப்பிரிவுகளில் சேவையாற்றும் பயிற்சி பெறாத தாதியர்களை குறித்த பிரிவுகளில் சேவையாற்றும் காலத்தை பயிற்சிக்காலத்துடன் சேர்க்குமாறு பிரதமர் ஆலோசனை வழங்கினார்.

மேலும் கருத்து தெரிவித்த சுகாதார அமைச்சின் செயலாளர் எஸ்.எச்.முனசிங்க, இதுவரை 840 தாதியர்களுக்கு தீவிர சிகிச்சைப் பிரிவில் சேவையாற்றுவதற்கான குறுகியகால பயிற்சி வழங்கப்பட்டுள்ளதாகவும் மேலும் சுமார் 1000 பேருக்கு துரித பயிற்சி வேலைத்திட்டமொன்றை செயற்படுத்துவதாகவும் தெரிவித்தார்.

ஓய்வுபெற்ற தாதியர்களை தேவைக்கேற்ப ஒப்பந்த அடிப்படையில் மீண்டும் சேவையில் இணைத்துக்கொள்ளுமாறு சுகாதார அமைச்சருக்கு இதன்போது தெரிவித்த பிரதமர், தாதியர்களின் சேவை காலத்தை நீடிப்பது குறித்த செயற்பாட்டின் தற்போதைய நிலை குறித்தும் வினவினார்.

தாதியர்களின் சேவை காலத்தை 63 ஆண்டுகள் வரை நீடிப்பது தொடர்பான அமைச்சரவைப் பத்திரம் ஏற்கனவே அமைச்சரவை அனுமதிக்காக சமர்ப்பிக்கப்பட்டுள்ளதாக சுகாதார அமைச்சின் செயலாளர் எஸ்.எச்.முனசிங்க இதன்போது வலியுறுத்தியதுடன், கொவிட் தொற்று நிலைமைக்கு மத்தியில் சுகாதார சேவையில் ஈடுபடும் அனைவரும் இதுவரை சிறப்பாக சேவையாற்றி வருவதாக தெரிவித்த பிரதமர், அவர்களுக்கான தடுப்பூசி ஏற்றும் நடவடிக்கைகள் தொடர்பில் சுகாதார அமைச்சின் செயலாளரிடம் வினவினார்.

சுகாதாரத்துறையில் அனைவருக்கும் இதுவரை தடுப்பூசி பெற்றுக்கொடுக்கப்பட்டுள்ளதுடன், அவர்களது குடும்ப உறுப்பினருக்கு இரண்டாவது டோஸ் தடுப்பூசி ஏற்றும் நடவடிக்கை தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக சுகாதார அமைச்சின் செயலாளர் குறிப்பிட்டார்.

பயணத்தடை விதிக்கப்பட்டுள்ள காலப் பகுதியில் தாதியர்களுக்கான போக்குவரத்து வசதிகளை பெற்றுக்கொடுக்க முறையான செயற்பாடொன்றை வகுக்குமாறு இதன்போது பிரதமர் அதிகாரிகளுக்கு ஆலோசனை வழங்கினார்.

தாதியர் பட்டத்தை பெற்றுக்கொடுக்கும் செயற்பாட்டை துரிதப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்குமாறும் பிரதமர், சுகாதார அமைச்சருக்குத் தெரிவித்தார்.

தற்போது தாதியர் பட்டத்தை வழங்குவதற்கான பணி சட்டவரைபுகளுக்காக சட்ட மா அதிபர் திணைக்களத்திற்கு பரிந்துரைக்கப்பட்டுள்ளதுடன், சம்பந்தப்பட்ட வரைபை விரைவாக நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கத் தேவையான நடவடிக்கைகளை எடுக்க முடிவு செய்யப்பட்டுள்ளது என்பது இந்தக் கூட்டத்தில் வெளிப்படுத்தப்பட்டது. பிரதமர், ஜனாதிபதியாக சேவையாற்றிய காலப்பகுதியில் தாதியர்களுக்கான சீருடை கொடுப்பனவு அதிகரிக்கப்பட்ட பின்னர் இதுவரை அக்கொடுப்பனவு அதிகரிக்கப்படவில்லை என தெரிவித்த முறுத்தெட்டுவே தேரர், அக்கொடுப்பனவை அதிகரிக்குமாறு வேண்டுகோள் விடுத்தார்.

இது குறித்து பொதுத் தீர்மானம் மேற்கொண்டு எதிர்வரும் வரவு-செலவுத் திட்டத்தில் அதனை நிறைவேற்ற முடியும் என பிரதமர் தெரிவித்தார்.

இந்தச் சந்திப்பில் சுகாதார அமைச்சர் பவித்ரா வன்னயாராச்சி, பிரதமரின் செயலாளர் காமினி செனரத், பிரதமர் அலுவலக ஊழியர்களின் பிரதானி யோஷித ராஜபக்ஷ, சுகாதார அமைச்சின் செயலாளர் விசேட வைத்தியர் எஸ்.எச்.முனசிங்க, சுகாதார சேவை பணிப்பாளர் நாயகம் வைத்தியர் அசேல குணவர்தன, பொது சேவை ஐக்கிய தாதியர் சங்கத்தின் தலைமை செயலாளர் எச்.ஏ.டீ.கல்யாணி, உப தலைவர் ஆர்.கே.படுவிட, உப செயலாளர் புஷ்பா ரம்யானி டி சொய்சா, கந்தானை தாதியர் கல்லூரியின் அதிபர் டப்ளிவ்.ஏ.கீர்த்தி உள்ளிட்ட பலர் குறித்த சந்திப்பில் கலந்துகொண்டனர்.

# கம்பளை நகரில் யாசகர்கள் ஒன்பது பேருக்கு கொரோனா





(கம்பளை நிருபர்)

கம்பளை நகரில் 9 யாசகர்களுக்கு கொரோனா வைரஸ் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

கம்பளை நகரிலுள்ள இ.போ.ச. பஸ் தரிப்பிட வளாகத்திலேயே அதிகளவு யாசகர்கள் தங்கியுள்ளனர்.

இவர்களில் ஒருவருக்கு திடீர் சுகயீனம் ஏற்பட்டதையடுத்து, வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பின்னர் வைரஸ் தொற்று உறுதிப்படுத்தப்பட்டது.

இதனையடுத்து கம்பளை இ.போ.ச. பஸ் தரிப்பிட வளாகத்திலுள்ள மேலும் 13 யாசகர்கள் நேற்று அன்ரிஜன் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டனர். இதில் 8 பேருக்கு கொரோனா வைரஸ் தொற்றியிருப்பது கண்டறியப்பட்டது.

தொற்றுக்குள்ளானோரை சிகிச்சை நிலையங்களுக்கு கொண்டுசெல்வதற்கான நடவடிக்கையை சுகாதார அதிகாரிகள் மேற்கொண்டு வருகின்றனர்.

# நுவரெலியா மாவட்டத்தில் கொவிட் தடுப்பூசி ஏற்றும் பணி ஆரம்பம்

(க.கிஷாந்தன்)

நுவரெலியா மாவட்ட மக்களுக்கு கொவிட் - 19 தடுப்பூசி ஏற்றும் பணி நேற்று ஆரம்பமானது.

நுவரெலியா காமினி தேசிய பாடசாலையில் வைத்து ஆரம்பமான தடுப்பூசி திட்டத்தில் முதற்கட்டமாக அத்தியாவசிய சேவைகளில் ஈடுபடும் அரச ஊழியர்கள், பொலிஸார், தோட்ட அதிகாரிகள் மற்றும் தோட்ட முன்கள பணியாளர்கள் ஆகியோருக்கு தடுப்பூசி ஏற்றப்பட்டது.

நுவரெலியா மாவட்டத்துக்கென 50 ஆயிரம் சினோபார்ம் தடுப்பூசிகள் வழங்கப்பட்டுள்ளன. இதில் கொரோனா வைரஸ் பரவும் அபாயமுள்ள கிராமசேவகர் பிரிவுகளில் வாழும் 60 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கு 40 ஆயிரம் தடுப்பூசிகள் ஒதுக்கப்பட்டுள்ளன.

ஏனைய 10 ஆயிரம் தடுப்பூசிகள் பொலிஸார், அத்தியாவசிய சேவைகளில் ஈடுபடும் அரச ஊழியர்கள் மற்றும் பெருந் தோட்டத் தொழிற்றுறையில் ஈடுபட்டுள்ளவர்களுக்கு வழங்கப்படவுள்ளன.





# சீரற்ற காலநிலையால் தலவாக்கலையில்

## ஐந்து குடியிருப்புகளில் 30 பேர் பாதிப்பு!

(பா.பாலேந்திரன்)

அக்கரப்பத்தனை பிரதேச சபைக்குட்பட்ட தலவாக்கலை பெஹெரம் தோட்டத்தில் நேற்று முன்தினம் இரவு பெய்த கடும் மழையால் 5 வீடுகளிலுள்ள 30 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

நேற்று முன்தினம் மாலை பெய்த கடும் மழையால் பெஹெரம் தோட்டத்தின் ஊடாக செல்லும் ஆறு பெருக்கெடுத்ததால் 5 குடியிருப்புகளுக்குள் வெள்ள நீர் பாய்ந்துள்ளது. இதனால் 30 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இதன்போது வீட்டிலிருந்த உடைமைகளுக்கும் சேதங்கள் ஏற்பட்டுள்ளதுடன், சில பொருட்கள் வெள்ளத்தில் அடித்துச் செல்லப்பட்டுள்ளனது.

பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு நேற்றைய தினம் கிராம அதிகாரியின் ஊடாக நிவாரணங்கள் பெற்றுக்கொடுக்கப்பட்டுள்ளன. இத்துடன், இத்தோட்டத்தினூடாக செல்லும் ஆற்றை அகலப்படுத்தி தருமாறும் கேட்டுக்கொள்கின்றார்கள்.



# ஓய்வூதியக் கொடுப்பனவு பெறுவோருக்கு இராணுவத்தினரால் விசேட வாகன வசதி

## யாழ். அரச அதிபர் மகேசன் தெரிவிப்பு



ஓய்வூதிய கொடுப்பனவு பெறுவோருக்கு இராணுவத்தினரால் விசேட வாகன வசதி ஏற்பாடுசெய்யப்பட்டுள்ளது – என யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் க.மகேசன் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

இன்று ஓய்வூதிய கொடுப்பனவு பெறுவோர் தமக்குரிய கொடுப்பனவை வங்கிகளில் பெறவுள்ள நிலையில், தற்போதுள்ள பயணத்தடையின் காரணமாக ஓய்வூதியக் கொடுப்பனவை பெறுவோர் தமது கொடுப்பனவை பெறுவதில் சிரமங்களை எதிர்நோக்கவேண்டி இருப்பதாக தெரிவிக்கப்பட்டதையடுத்து ஒவ்வொரு பிரதேச செயலர் பிரிவிலும் இாணுவத்தினரால் வாகன ஒழுங்குகள் ஏற்பாடுசெய்யப் பட்டுள்ளன.

எனவே, யாழ். மாவட்டத்தில் ஓய்வூதியம் பெறுவோர் அவர்களுக்கு வாகன வசதி தேவைப் படுமாயின் தமது கிராமசேவகருடன் தொடர்புகொண்டு பிரதேச செயலர் ஊடாக தமக்கென ஒதுக்கப்பட்ட வாகனங்களில் பயணித்து ஓய்வூதியக் கொடுப்பனவை பெற்றுக்கொள்ள முடியும்.

தற்போதுள்ள இடர் நிலையை கருத்திற்கொண்டு முதியோருக்கு ஏற்படும் சிரமங்களை தவிர்க்கும் முகமாகவும் தொற்று பரவலை கட்டுப்படுத்தும் முகமாகவும் இராணுவத்தினரால் இந்த ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது – என்றார்.

# நீண்ட பயணத்தடை காரணமாக மட்டி பொறுக்கும் நிலையில் மக்கள்

(மன்னார் நகர் நிருபர்)

நாடளாவிய ரீதியில் நீண்டநாட்களாக விதிக்கப்பட்டுள்ள பயணத்தடை காரணமாக அன்றாட கூலித் தொழிலில் ஈடுபடும் ஆயிரக்கணக்கான குடும்பங்கள் மன்னாரில் நேரடியாக பாதிக்கப்பட்டுள்ள நிலையில் - அன்றாட உணவுத் தேவையை பூர்த்திசெய்ய முடியாத நிலையில் சில குடும்பங்கள் சேற்றுநீரில் மட்டி பொறுக்கி உணவுத் தேவையை பூர்த்திசெய்யும் நிலை காணப்படுகின்றது

பயணத்தடை நடுத்தர குடும்பங்களையே பாதித்துள்ள நிலையில் ஒழுங்கான தொழில்வாய்ப்பும் இல்லாமல் அத்தியாவசிய பொருட்களின் விலையேற்றத்தினால் அன்றாட தொழிலில் வருமானம் ஈட்டும் குடும்பங்கள் செய்வதறியாது தவித்து வருகின்றனர்

பயணத்தடை ஒருபுறம் மக்களின் வாழ்வாதரத்தை நெருக்கிவரும் நிலையில் அதிகரித்த விலையில் மரக்கறிகள் விற்கப்பட்டு வருவதாலும் மீன்களை பெற்றுக்கொள்வதில் சிரமம் காணப்படுவதாலும் நடுத்தர குடும்பங்கள் உட்பட அநேகர் கடலாற்றுப் பகுதியில் சேற்றுக்கு நடுவில் காணப்படும் மட்டியை சேகரித்து உணவுத் தேவையை பூர்த்திசெய்து வருகின்றனர்

சிலர் மட்டி பொறுக்குதலை பொழுதுபோக்குக்கு செய்கின்றபோதிலும் பலர் உணவுக்காகவும் இன்னும் சிலர் மட்டியிலிருந்து சேகரித்த சதைகளை விற்பனைசெய்து வாழ்வாதாரத்தைக் கொண்டு நடத்துகின்றனர்.

அரசாங்கத்தினால் அறிவிக்கப்பட்ட 5000 ரூபா கொடுப்பனவு சமுர்த்தி பெறும் குடும்பங்களுக்கு மாத்திரமே கொடுக்கப்பட்டுள்ள நிலையில் சமுர்த்தி பெறாத மற்றும் வறுமைக்கோட்டுக்கு உட்பட்ட அநேகர் மட்டியை உணவுக்காக பொறுக்கி வருகின்றனர்.

# சட்டவிரோத மணல் அகழ்வில் ஈடுபட்ட இளைஞரொருவர் கைது

(சாவகச்சேரி நிருபர்)

தென்மராட்சி-அல்லாரை கிராமத்தில் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை சட்ட விரோத மணல் அகழ்வில் ஈடுபட்ட உழவு இயந்திரத்துடன் இளைஞன் ஒருவர் படையினரால் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

ரோந்து நடவடிக்கையில் ஈடுபட்ட படையினர் சட்டவிரோத மணல் அகழ்வில் ஈடுபட்ட உழவு இயந்திரத்தை மறித்தபோது நிறுத்தாமல் சென்ற உழவு இயந்திரத்தின் முன்சில்லு கழன்று விபத்துக்குள்ளான நிலையில், படையினர் மணலுடன் உழவு இயந்திரத்தை கைப்பற்றியதுடன், சம்பவத்துடன் தொடர்புடைய கச்சாய் தெற்கு பகுதியைச் சேர்ந்த 25 வயதான இளைஞன் ஒருவரையும் கைதுசெய்து சாவகச்சேரி பொலிஸாரிடம் ஒப்படைத்துள்ளனர்.

தென்மராட்சி பகுதியில் தற்போது இராணுவத்தினர் சட்டவிரோத மணல் அகழ்விற்கு எதிராக நடவடிக்கை எடுத்துவரும் நிலையில், சட்டவிரோத மணல் அகழ்வு நடவடிக்கைகள் ஓரளவுக்குக் குறைவடைந்துள்ளமை குறிப்பிடத் தக்கது.



# வவுனியாவில் தனிமைப்படுத்தப்பட்ட 5 வர்த்தக நிலையங்கள் சுகாதாரப் பிரிவினரால் விடுவிப்பு

(வவுனியா நிருபர்)

வவுனியாவில் பயணக்கட்டுப்பாட்டு விதிமுறைகளை மீறி செயற்பட்டதாக மூடப்பட்ட 5 வர்த்தக நிலையங்கள் சுகாதாரப் பிரிவினரால் விடுவிக்கப்பட்டதுடன், நிபந்தனைகளின் அடிப்படையில் வீடுகளுக்கு கொண்டுசென்று அத்தியாவசியப் பொருட்களை வழங்கவும் நேற்று அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

நாட்டில் ஏற்பட்டுள்ள கொவிட் அச்சுறுத்தல் காரணமாக நாடுபூராகவும் முழுமையான முடக்கம் அறிவிக்கப்பட்டுள்ளது. இந்நிலையில், மக்களது அத்தியாவசிய தேவைகளை பெறும் வகையில் மக்களுக்குத் தேவையான அத்தியாவசியப் பொருட்களை வீடு வீடாகச் சென்று வழங்குவதற்கு பிரதேச செயலகங்கள் ஊடாக சில வர்த்தக நிலையங்களுக்கு பாஸ் அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

இந்நிலையில், வவுனியா பிரதேச செயலகம் ஊடாக வீடு வீடாக பொருட்களை விநியோகிப்பதற்கு அனுமதி பெற்றுக்கொண்ட வர்த்தக நிலையங்கள் தொடர்பில் விசேட சோதனை நடத்திய சுகாதாரப் பிரிவினர் வவுனியா, பண்டாரிக்குளம் பகுதியில் பயணக்கட்டுப்பாட்டு விதிமுறைகளை மீறி செயற்பட்ட வர்த்தக நிலையங்கள் மற்றும் வீடு வீடாக பொருட்களை வழங்குவதற்கு வழங்கப்பட்ட பாஸ் அனுமதியை முறைகேடாக பயன்படுத்திய வர்த்தக நிலையங்கள் என்பவற்றுக்கு எதிராக நடவடிக்கை எடுத்திருந்தனர்.

இதன்போது பலசரக்கு வியாபார நிலையம் நான்கு, பாண் விற்பனை நிலையம் ஒன்று என 5 வர்த்தக நிலையங்கள் சுகாதாரப் பிரிவினரால் கடந்த ஞாயிற்றுக்கிழமை (06.09) மூடப்பட்டதுடன், குறித்த வர்த்தக நிலையங்கள் 14 நாட்கள் சுகாதாரப் பிரிவினரால் தனிமைப்படுத்தல் சுவரொட்டி ஒட்டப்பட்டு தனிமைப்படுத்தப்பட்டன.



இந்நிலையில், அப்பகுதி மக்கள் அத்தியாவசியப் பொருட்களை பெற்றுக்கொள்ள இடர்பாடுகளை எதிர்நோக்கிய நிலையில் பண்டாரிக்குளம் பொது அமைப்புகள் மற்றும் கிராம அலுவலர் ஆகியோரின் கோரிக்கைக்கமைவாக குறித்த வர்த்தக நிலையங்கள் தனிமைப்படுத்தலிலிருந்து சுகாதாரப் பிரிவினரால் விடுவிக்கப்பட்டதுடன், வீடுகளுக்கு கொண்டுசென்று அத்தியாவசியப் பொருட்களை வழங்குவதற்கும் அனுமதி மீள வழங்கப்பட்டுள்ளது.

குறித்த வர்த்தக நிலையங்களை திறக்காது பாஸ் அனுமதி நிபந்தனைகளுக்கமைவாக சுகாதார வழிமுறைகளைப் பின்பற்றி வீடுகளுக்கு கொண்டுசென்று பொருட்களை வழங்க வேண்டும் எனவும், இதனை பொது அமைப்புகள் கண்காணிக்கும் எனவும் தீர்மானம் எட்டப்பட்டே குறித்த வர்த்தக நிலையங்கள் மீள செயற்பட சுகாதாரப் பிரிவினரால் பாஸ் அனுமதி மீள வழங்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

தமிழன்
THAMILAN
தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்
இல. 91, விஜேராம மாவத்தை, கொழும்பு 07.
தொலைநகல் : 0112 67 34 42.
தொலைபேசி : 0115 200 900/ 0115 88 61 87
விளம்பரம் : 077 172 1880
மின்னஞ்சல் : thamilannews@yahoo.com/ thamilaneditor@gmail.com
2021, ஜூன் 10ஆம் திகதி, வியாழக்கிழமை

# அவசரப்படக்கூடாது அரசு !

போக்குவரத்து கட்டுப்பாடுகள் நடைமுறையில் உள்ளபோதிலும் கொரோனா வைரஸின் தீவிரத்தன்மை குறையவில்லை என அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் தெரிவித்துள்ளது. போக்குவரத்துக் கட்டுப்பாடுகள் தளர்த்தப்பட்டுள்ளன. தற்போது மக்கள் கொழும்பை நோக்கி வருகின்றனர் என அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் மருத்துவர் பிரசாத் கொலம்பகே தெரிவித்துள்ளார்.

தொற்றாளர்களின் எண்ணிக்கையும், உயிரிழப்பவர்களின் எண்ணிக்கையும் நாளாந்தம் அதிகரிப்பதாக குறிப்பிட்ட அவர், நாளாந்தம் சராசரியாக 40 பேர் உயிரிழக்கின்றனர் என தெரிவித்துள்ளார்.

நோயாளர்களின் எண்ணிக்கையும் அதிகரிக்கின்றது, மோசமாக பாதிக்கப்படுபவர்களின் எண்ணிக்கையும் அதிகரிக்கின்றது என அவர் தெரிவித்துள்ளார்.

ஏப்ரல் - மே மாதங்களில் ஒட்சிசனில் தங்கியிருப்பவர்களின் எண்ணிக்கை 441 வீதமாக அதிகரித்துள்ளது எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, நேற்றுக்காலை 6 மணியுடன் நிறைவடைந்த 24 மணிநேரத்தில் மாத்திரம் தனிமைப்படுத்தல் சட்டத்தை மீறிய 1,034 பேர் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளரும் பிரதி பொலிஸ் மா அதிபருமான அஜித் ரோஹண தெரிவித்திருக்கிறார்.

உரிய முறையில் முகக்கவசம் அணியாமை, மாகாண எல்லைகளை கடந்தமை தொடர்பான குற்றச்சாட்டுகள் தொடர்பில் இவர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

இதற்கமைய, கடந்த வருடம் ஒக்டோபர் மாதம்முதல் இதுவரையான காலப்பகுதியில் தனிமைப்படுத்தல் சட்டத்தை மீறிய குற்றச்சாட்டில் 26,920 பேர் கைதுசெய்யப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளரும் பிரதி பொலி ஸ்மா அதிபருமான அஜித் ரோஹண தெரிவித்தார். இவர்களில் சுமார் 26 ஆயிரம் பேருக்கு எதிராக வழக்கு தொடரப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் மேலும் தெரிவித்துள்ளார்.

அதேசமயம், போக்குவரத்து கட்டுப்பாடுகளை நீக்கிவிட்டு முழுமையான ஊரடங்கை நடைமுறைப்படுத்துவது குறித்து அரசாங்கம் எந்த முடிவையும் எடுக்கவில்லை என இராணுவத் தளபதி ஜெனரல் ஷவேந்திர சில்வா தெரிவித்துள்ளார்.

நாட்டின் நிலைமை இப்படியிருக்க, தனிமைப்படுத்தல் சட்டம் தீவிரமாக அமுல்படுத்தப்படவேண்டுமெனவும் நாடு தொடர்ந்து முடக்கப்படவேண்டுமெனவும் விசேட வைத்திய நிபுணர்கள் ஜனாதிபதியிடம் வலியுறுத்தி கடிதமொன்றை அனுப்பியுள்ளனர். நாளுக்குநாள் கொரோனா பாதிப்பு வீதமும் மரண வீதமும் அதிகரித்துள்ளதால் இப்போதைக்கு பயணத்தடை தளரக்கூடாதென்பதே அரசின் கருத்தாக இருக்கிறது.

ஆனால், அரசாங்கமோ பயணத்தடையை தளர்த்த ஆலோசித்து வருவதாக சொல்லப்படுகிறது. ஏற்கனவே அறிவிக்கப்பட்ட பயணத்தடையை முறையாக கடைப்பிடிக்காத மக்கள், பயணத்தடை தளர்த்தப்பட்ட பின்னர் பொறுப்புடன் நடந்துகொள்வார்களென எண்ணுவதெல்லாம் வேடிக்கையான விடயமேயன்றி வேறென்ன? வைரஸின் தீவிரத்தன்மை குறையாத நிலையில், கண்ணுக்குத் தெரிந்த ஆயுதப்போரை முடிப்பதுபோல் கண்ணுக்குத் தெரியாத இந்த நுண்கிருமியின் தாக்கத்தை எதிர்நோக்க அரசு முயல்வது அறிவீனமானது.

இப்போதுள்ள நிலைமையில் மருத்துவ நிபுணர்களின் கருத்துகள் வேதவாக்காக கொள்ளப்படவேண்டுமென்பதை அரசிடம் வலியுறுத்திக் கூற விரும்புகிறோம். அவசரப்படாமல் அரசு அவர்களின் கருத்துகளுக்கு இடமளித்தல் வேண்டும்.

## கோறளைப்பற்று மத்தி சுகாதாரப் பிரிவில் கொரோனாவால் மூன்று நாட்களில் ஐவர் பலி

(எஸ்.எம்.எம்.முர்ஷித்)

கோறளைப்பற்று மத்தி சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகப் பிரிவில் கடந்த மூன்று நாட்களில் கொரோனா தொற்றின் காரணமாக ஐந்து பேர் மரணமடைந்துள்ளதாக சுகாதார தரப்பினர் தெரிவித்தனர்.

கடந்த ஞாயிற்றுக்கிழமை வாழைச்சேனை ஆர்.டி.ஒ. வீதியைச் சேர்ந்த 36 வயதுடைய கர்ப்பிணிப்பெண் ஒருவரும், பிறைந்துறைச்சேனை அறபா வீதியைச் சேர்ந்த 51 வயதுடைய சிறுநீரக நோயாளி ஒருவருமாக இரண்டு பேர் மரணமடைந்தனர்.

அத்தோடு கடந்த திங்கட்கிழமை ஆர்.டி.ஒ. வீதியைச் சேர்ந்த 80 வயதுடைய ஒருவர் மரணமானதுடன், 74 வயதுடைய அவரது மனைவி அன்று இரவு மரணமடைந்ததுடன், வாழைச்சேனை நான்காம் வட்டாரத்தைச் சேர்ந்த 74 வயதுடைய ஒருவரும் மரணமடைந்த நிலையில், அவர்கள் மூவருக்கும் மேற்கொண்ட பி.சி.ஆர். பரிசோதனையில் அவர்களுக்கு கொரோனா தொற்று உறுதிசெய்யப்பட்டுள்ளது.

இந்நிலையில் கொரோனா வைரஸின் மூன்றாவது அலையின் காரணமாக கோறளைப்பற்று மத்தி பிரதேச செயலகப் பிரிவில் இதுவரையில் ஐந்து பேர் மரணமடைந்துள்ளதாக சுகாதார தரப்பினர் தெரிவித்தனர்.

## மட்டக்களப்பில் 24 மணிநேரத்தில் கொரோனா தொற்றால் மூவர் பலி

### 186 பேருக்கு கொவிட் தொற்று உறுதி

(கனகராசா சரவணன்)

மட்டக்களப்பு மாவட்டத்தில் நேற்று காலையுடன் நிறைவடைந்த 24 மணிநேரத்தில் 3 பேர் உயிரிழந்துள்ளதுடன், 186 பேருக்கு கொரோனா தொற்று கண்டறியப்பட்டுள்ளதாக நேற்று மட்டக்களப்பு பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியர் நாகலிங்கம் மயூரன் தெரிவித்தார்.

கொரோனா சிகிச்சை நிலையத்தில் சிகிச்சை பெற்றுவந்து காங்கேயனோடை பிரதேசத்தைச் சேர்ந்த ஒருவரும், கோறளைப்பற்று மத்தியைச் சேர்ந்த இருவர் உட்பட 3 பேர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளனர்.


அதேவேளை, மட்டக்களப்பு பிராந்திய



சுகாதார சேவைகள் கீழ் உள்ள சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுகளான மட்டக்களப்பில் 33 பேரும், களுவாஞ்சிக்குடியில் 14 பேரும், வாழைச்சேனையில் 05 பேரும், காத்தான்குடியில் 20 பேரும், கோறளைப்பற்று மத்தியில் 21 பேரும், ஓட்டமாவடியில் 31 பேரும், செங்கலடியில் ஒருவரும், ஏறாவூரில் 27 பேரும் பட்டிருப்பில் 16 பேரும், வவுணதீவில் 03 பேரும், ஆரையம்பதியில் 03 பேரும், கிரானில் 03 பேரும், பொலிஸ் உத்தியோகத்தர்கள் 03 பேரும், சிறைச்சாலையில் 07 பேரும் உட்பட 186 பேருக்கு தொற்று கண்டறியப்பட்டதாக தெரிவித்தார்.

தொற்றுக்குள்ளானோரின் எண்ணிக்கை நாளாந்தம் அதிகரித்துச் செல்லுகின்றது. எனவே, பொதுமக்கள் பயணத்தடையை மீறி வீட்டிலிருந்து தேவையின்றி வெளியே வரவேண்டாம் என அவர் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

## தம்பலகாமம் பகுதியில் கொம்பன் யானை இறந்த நிலையில் மீட்பு



(கிண்ணியா நிருபர்)

தம்பலகாமம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கல்மெட்டியாவ வடக்கு ஈச்சங்குளம் காட்டுப் பகுதியை அண்டிய பகுதியில் யானை ஒன்று இறந்து கிடப்பதாக நேற்று முன்தினம் மாலை பொலிஸார் தெரிவித்தனர்.

சுமார் 30 - 35 வயது மதிக்கத்தக்க ஆண் கொம்பன் யானை எனவும் எட்டு அடி உயரம் கொண்டதெனவும் பொலிஸார் தெரிவித்தனர்.

இதேவேளை, குறித்த யானையானது இரு வாரங்களுக்கு முன்னர் பன்றிக்கு வைக்கும் சோளவ வெடியை உட்கொண்டு தொண்டையில் சிக்கியதன் காரணமாக உணவு சாப்பிட முடியாது இறந்திருக்கலாம் என வன ஜீவராசிகள் அதிகாரிகள் தெரிவித்தனர்.

இரண்டரை அடி நீளம் கொண்ட தந்தத்தை உடைய இந்த யானை, அப்பகுதியில் நடமாடியதாகவும் தெரிவித்தனர்.

யானையின் உயிரிழப்பு சம்பவம் தொடர்பிலான மேலதிக விசாரணைகளை வனஜீவராசி அதிகாரிகளுடன் இணைந்து தம்பலகாமம் பொலிஸார் முன்னெடுத்துள்ளனர்.




## ஓட்டமாவடியில் 133 பேரிடம் மேற்கொண்ட பி.சி.ஆர். பரிசோதனையில் 29 பேருக்கு தொற்று!



(எச்.எம்.எம்.பர்ஸான்)

ஓட்டமாவடியில் 133 பேருக்கு மேற்கொண்ட பி.சி.ஆர். பரிசோதனையில் 29 பேருக்கு கொரோனா தொற்று உறுதிசெய்யப்பட்டுள்ளது.

கோறளைப்பற்று மேற்கு ஓட்டமாவடி சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகப் பிரிவில் நாளாந்தம் கொரோனா தொற்றுக்குள்ளாவோர் அடையாளம் காணப்பட்டு வருவதாக சுகாதார வைத்திய அதிகாரி எம்.எச்.எம்.தாரிக் தெரிவித்தார்.

அந்தவகையில், கடந்த 5ஆம் திகதி குறித்த சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகப் பிரிவில் 133 பேருக்கு மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர். பரிசோதனையின் முடிவு நேற்று முன்தினம் கிடைத்துள்ளது.

அதில் 29 பேருக்கு கொரோனா தொற்று இருப்பதாக உறுதிசெய்யப்பட்டுள்ளது.

எனவே, பொதுமக்கள் சுகாதார அறிவுறுத்துதல்களைப் பேணி நடந்து கொள்ளுமாறு வைத்திய அதிகாரி கேட்டுக்கொண்டுள்ளார்.

## கல்முனையில் கடலில் மூழ்கி உயர்தர மாணவனொருவர் பலி



(பாறுக் ஷிஹான், நூருல் ஹுதா உமர்)

நண்பர்களுடன் கடலில் குளிக்கச்சென்ற மாணவன் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

அம்பாறை மாவட்டம், கல்முனை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட பகுதியிலுள்ள கடலில் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை மாலை நண்பர்களுடன் நீராடச்சென்ற மாணவனே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

இவ்வாறு சடலமாக மீட்கப்பட்ட மாணவன் கல்முனை கார்மேல் பாத்திமா கல்லூரியில் உயர்தரம் தொழில்நுட்பப் பிரிவில் கல்வி பயிலும் நேசமணி அக்ஸயன் (வயது 17) ஆவார்.

இவர் நண்பர்களுடன் கூட்டாக இணைந்து மாலை கடலில் குளித்துக்கொண்டிருந்தபோதே சம்பவம் நடைபெற்றுள்ளதுடன், சம்பவம் தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

மேலும், மரணமான மாணவனின் உடல் மீட்கப்பட்ட பகுதி ஆழமான பகுதியாக அடையாளப்படுத்தப்பட்டுள்ளதாகவும் உடனடியாக ஆழமான பகுதி என அறிவித்தல் பலகை ஒன்றை நிர்மாணிக்கவுள்ளதாகவும் சம்பவ இடத்திற்கு வருகை தந்த கல்முனை மாநகர சபை உறுப்பினர் ச.ராஜன் கல்முனை ஆதார வைத்தியசாலையில் வைத்து ஊடகங்களிடம் தெரிவித்தார்.

இது தவிர, தற்போது கொரோனா அனர்த்தங்களினால் பயணக்கட்டுப்பாடு நடைமுறையிலுள்ள நிலையில், இந்தச் சம்பவம் நடைபெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கதுடன், இறந்த மாணவனின் தாயார், ஆசிரியர் என்பதுடன் தந்தையார் தச்சு வேலை செய்பவர் எனவும் விசாரணையில் தெரியவந்துள்ளது.

கல்முனை ஆதார வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ள சடலம் பிரேத பரிசோதனையின் பின்னர் உறவினர்களிடம் ஒப்படைக்கப்படவுள்ளது.

## காரைதீவில் சட்டவிரோதமாக கசிப்பு காய்ச்சிய ஒருவர் கைது



(நூருல் ஹுதா உமர்)

காரைதீவில் சட்டவிரோதமாக கசிப்பு காய்ச்சிய ஒருவர் சம்மாந்துறை பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளதுடன், கசிப்பு காய்ச்ச பயன்படுத்திய பொருட்களும் நேற்று முன்தினம் கைப்பற்றப்பட்ட சம்பவம் பதிவாகியது.

பொலிஸாருக்குக் கிடைத்த இரகசிய தகவலையடுத்து, காரைதீவு பொலிஸ் காவலரண் பொறுப்பதிகாரியும் உப பொலிஸ் பரிசோதகருமான கே.கே.அமரானந்த தலைமையிலான பொலிஸ் குழுவினரால் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பிலேயே இந்தக் கைது நடவடிக்கை நடைபெற்றுள்ளது.

அம்பாறை, கல்முனை பிராந்திய உதவி பொலிஸ் அத்தியட்சகர் பி.எம்.ஜயரட்னவின் ஆலோசனையில், சம்மாந்துறை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி கே.டி.எஸ்.ஜெயலத்தின் வழிகாட்டலில் நடைபெற்ற இந்த சுற்றிவளைப்பில் காரைதீவு எட்டாம் பிரிவைச் சேர்ந்த ஒருவர் சந்தேகத்தின்பேரில் கைதுசெய்யப்பட்டுள்ளதுடன், கசிப்பு காய்ச்ச பயன்படுத்திய பொருட்களும் 40 கசிப்பு போத்தல்களும் கைப்பற்றப்பட்டுள்ளன.

சந்தேகத்தின்பேரில் கைதுசெய்யப்பட்டுள்ள நபரை சம்மாந்துறை நீதிமன்றத்தில் நேற்று ஆஜர்படுத்தும் ஏற்பாடுகளை செய்துவருவதாக பொலிஸார் தெரிவித்தனர்.

## அம்பாறை மாவட்டத்தில் அத்தியாவசிய பொருட்களின் விலை அதிகரிப்பைக் கட்டுப்படுத்துமாறு பொதுமக்கள் கோரிக்கை

(அக்கரைப்பற்று நிருபர்)

கொரோனா பயணத்தடையை வைத்து அம்பாறை மாவட்டத்தில் அத்தியாவசிய பொருட்களின் விலைகளை அதிகரித்து விற்கும் வர்த்தகர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்குமாறு பொதுமக்கள் உரிய அதிகாரிகளிடம் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

அம்பாறை மாவட்டத்தின் அனைத்து பிரதேசங்களிலும் கொரோனா தொற்று பயணத்தடையை காரணமாக வைத்து உணவுப் பொருட்கள்முதல் அனைத்துப் பொருட்களின் விலைகளும் இரு மடங்கில் அதிகரித்து விற்பனைசெய்யப்பட்டு வருவதனால் வீடுகளில் முடங்கியிருக்கும் பொதுமக்கள் சொல்லொணா துயரத்தை எதிர்நோக்கியுள்ளனர். தொழில்கள் அனைத்தும் முடக்கப்பட்டு வருமானமின்றி வீடுகளில் இருக்கும் பொதுமக்களுக்கு வர்த்தகர்கள் நினைத்தவாறு பொருட்களுக்கான விலைகளை அதிகரித்து விற்கப்பட்டு வருவதனால் உணவுப்பொருட்களை கொள்வனவு செய்து உணவு உண்ணமுடியாத நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர்.

குறிப்பாக, பொருட்களுக்கு பாரிய தட்டுப்பாடு நிலவிவரும் இவ்வாறான சூழ்நிலைகளில் கிடைக்கும் மீனின் விலை இரு மடங்காக அதிகரித்துள்ளதுடன், மரக்கறி, அரிசி மற்றும் அன்றாட பாவனைப் பொருட்களின் விலைகளும் அதிகரித்துள்ளன. அதுமட்டுமல்லாது கட்டடப் பொருட்களின் விலைகளும் நாளுக்குநாள் அதிகரித்துச் செல்கின்றன.

பிரதேச செயலகங்களினால் உணவுப் பொருட்களின் விலைகள் தீர்மானிக்கப்பட்டு அறிவிக்கப்பட்டிருந்தாலும் அவை வர்த்தகர்களினால் கடைப்பிடிக்கப்படாது ஒவ்வொருவரும் தான் நினைத்த விலைக்கே விற்பனைசெய்து வருகிறார்கள். இச்செயற்பாடுகள் பிரதேச செயலகங்களினால் கண்காணிக்கப்படவில்லை என்றே பொதுமக்கள் குற்றஞ்சாட்டி வருகின்றனர்.

நிரந்தர வருமானத்தைப் பெறுபவர்கள் அல்லது பணவசதி படைத்தவர்கள் பொருட்களை கொள்வனவுசெய்தாலும், நிரந்தர வருமானம் இல்லாதவர்கள், நாளாந்தம் கூலி வேலை செய்பவர்கள் எவ்வித வருமானமுமின்றி அல்லல்படும் இந்நிலையில் உணவுப் பொருட்களை கொள்வனவு செய்யமுடியாது திண்டாடி வருகின்றனர்.

எனவே, இந்த இக்கட்டான காலத்தில் பொருட்களின் விலையேற்றத்தை உரிய அதிகாரிகள் கண்காணித்து உரியவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுப்பதுடன், விலையேற்றத்தை தடுக்குமாறும் பொதுமக்கள் உரிய அதிகாரிகளிடம் வேண்டுகோள் விடுக்கின்றனர்.

## பயணத்தடை காரணமாக காரைதீவில் அன்றாட கூலித் தொழிலாளர்கள் பாதிப்பு

(காரைதீவு நிருபர்)

அத்தியாவசிய தேவைகளுக்காக வெளியேறுபவர்களைத் தவிர அநாவசியமாக சுற்றித் திரிபவர்களாலேயே தாம் வெகுவாக பாதிக்கப்படுவதாக காரைதீவு கூலித் தொழிலாளர்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

கொவிட்-19 தொற்றிலிருந்து பாதுகாப்பு பெறும் பொருட்டு அரசினால் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ள பயணத்தடைக்கு மத்தியில் தாம் முழுமையான ஒத்துழைப்பு வழங்கி வருகின்றபோதிலும் பொறுப்பற்ற சிலரின் செயற்பாடுகள் காரணமாக தாம் பெரும் துயரங்களை அனுபவிக்க வேண்டியுள்ளதாக அன்றாட கூலி வேலைசெய்து வாழ்ந்துவரும் தொழிலாளர்கள் வருத்தம் தெரிவிக்கின்றனர்.

அதிக வருமானத்தோடும், வாய்ப்பு வசதிகளோடும் இருக்கின்ற சிலர் இக்காலகட்டத்தில் எவ்வித சுய கட்டுப்பாடுகளுமின்றி தாம் நினைத்தவாறு நடந்துகொள்கின்றனர். இதனைக் கட்டுப்படுத்தும் வகையில் சுகாதார மற்றும் பாதுகாப்புத் தரப்பினர் கடும் பிரயத்தனங்களை மேற்கொள்வதுடன், சில சந்தர்ப்பங்களில் கடுமையான நடவடிக்கைகளை எடுக்கவேண்டிய நிலைக்கும் தள்ளப்படுகின்றனர். இந்நிலையில், அன்றாட வருமானத்திற்காக கூலி வேலை செய்வதற்கு சற்று வெளியே செல்லக்கூட முடியாமல் தாம் திணாடாடுவதாகவும் இதனால் தமது குடும்பங்கள் அன்றாட ஜீவனோபாயத்துக்காக மிகவும் கஷ்டப்படுவதாகவும் கவலை தெரிவிக்கின்றனர்.

நாளாந்தம் தொழில் வசதியின்றி பல்வேறு கவலைகளுக்கும் மத்தியில் தாம் செய்வதறியாது திகைத்துக்கொண்டிருக்கும்போது சிலர் இதைப்பற்றி சிறிதும் கருத்திற்கொள்ளாமல் அநாவசியமாகச் சுற்றித்திரிகின்றனர். ஆனால், தமது குடும்பக் கஷ்டங்களை நிவர்த்திசெய்யும் நோக்கில் ஏதாவது கூலித் தொழிலுக்காக அருகிலுள்ள தெருவுக்குக்கூட செல்ல முடியாமல் தமக்கு தடை விதிக்கப்படுகிறது.

தமது அன்றாட வாழ்வில் இவ்வாறான ஒரு நிலை இதுவரை ஏற்படவில்லை எனவும் தமக்கு யாரும் நிவாரணம் கொண்டுவந்து தராவிட்டாலும் பரவாயில்லை தாம் அன்றாடம் கூலி வேலை செய்வதாவது பிழைப்பதற்கான சூழலை ஏற்படுத்தித் தந்தாலே போதும் எனவும் கூலித் தொழிலாளி ஒருவர் கருத்துத் தெரிவித்தார்.

அன்றாட குடும்ப வருமானம் பாதிக்கப்பட்டு பரிதாப நிலைக்குத் தள்ளப்பட்டுள்ள தம்மைப் போன்ற ஏழைக் குடும்பங்கள் மீண்டும் உழைத்து வாழவேண்டும் என்ற எதிர்பார்ப்பில் இருக்கும் சூழலில் அவர்களின் நன்மைக்காகவாவது ஏனையோர் பொறுப்புடன் நடந்துகொள்வதும் ஒருவகையான மனிதாபிமான செயலாக அமையும் எனவும் அவர்கள் எதிர்பார்க்கின்றனர்.

# பீடி இலைகள் - உலர்ந்த மஞ்சளுடன் ஒருவர் கடற்படையினரால் கைது







மன்னார், வங்கால கடற்கரை பகுதியில் கடற்படையினரால் மேற்கொள்ளப்பட்ட சிறப்புச் சோதனை நடவடிக்கையின்போது சட்டவிரோதமான முறையில் நாட்டிற்குள் கடத்த முயன்ற 514 கிலோ கிராம் பீடி இலைகள் (Kendu Leaves) மற்றும் சுமார் 70 கிலோகிராம் உலர்ந்த மஞ்சளுடன் சந்தேகநபர் ஒருவர் நேற்று முன்தினம் கடற்படையினரால் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

சட்டவிரோத நடவடிக்கைகளைத் தடுப்பதற்காகக் தீவைச் சுற்றியுள்ள கடல் பகுதிகளில் தொடர்ந்து சோதனை நடவடிக்கைகளை கடற்படையினர் மேற் கொண்டு வருகின்றனர்.

அதன்படி, வட மத்திய கடற்படை கட்டளையின் கடற்படையினர் நேற்று முன்தினம் மன்னார், வங்கால கடற்கரைப் பகுதியில் சிறப்புச் சோதனை நடவடிக்கையொன்றை மேற்கொண்டுள்ளதுடன், கடல் வழியாகக் கடத்தி கடற்கரை அருகிலுள்ள புதர்களில் மறைத்து வைக்கப்பட்டிருந்த சுமார் 514 கிலோ கிராம் பீடி இலைகள் மற்றும் சுமார் 70 கிலோகிராம் உலர்ந்த மஞ்சள் பொதிகளுடன் ஒரு சந்தேக நபர் கடற்படையினரால் கைதுசெய்யப்பட்டார்.

கொரோனா பரவுவதைத் தடுப்பதற்காக வழங்கப்பட்ட சுகாதார அறிவுறுத்தல்கள் மற்றும் நடைமுறைகளைப் பின்பற்றி மேற்கொள்ளப் பட்ட இந்த நடவடிக்கை மூலம் எருக்கலம்பிட்டி பிரதேசத்தைச் நேர்ந்த 41 வயதுடையவரே இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளார்.

பீடி இலைகள் மற்றும் உலர்ந்த மஞ்சள் ஆகியவை மேலதிக விசாரணைகளுக்காக மன்னார், வங்கால பொலிஸாரிடம் ஒப்படைக்கப் பட்டன.

# மன்னார் மாவட்டத்தில் இயற்கை முறையிலான பசளை தயாரிப்பு

## அரசாங்க அதிபர் கண்காணிப்பு விஜயம்

(மன்னார் நகர் நிருபர்)

நாட்டிலுள்ள விவசாயிகள் தமது தோட்டம் மற்றும் விவசாயச் செய்கைகளை இயற்கை பசளையினூடாக ஊக்குவிக்க உரிய திணைக்களங்கள் நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ அறிவுறுத்தல் வழங்கியுள்ளார்.

இந்நிலையில், மன்னார் மாவட்டத்தில் மன்னார் பிரதேசச் செயலாளர் பிரிவில் இயற்கை உற்பத்தி பசளையினை மேற்கொள்ளும் இடம் மற்றும் இயற்கை பசளையினூடாக மேற்கொள்ளும் பயிர்ச் செய்கையினையும் மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி ஏ.ஸ்ரான்லி டி மேல் நேற்று (9) நேரடியாகச் சென்று பார்வையிட்டார்.

மன்னார் மாவட்ட அரசாங்க அதிபருடன் கமநல சேவை உதவி ஆணையாளர், விவசாய பணிப்பாளர், மன்னார் நகர சபையின் செயலாளர், மாவட்ட விவசாய உத்தியோகத்தர் ஆகியோர் இணைந்து விஜயம் ஒன்றை மேற்கொண்டிருந்தனர்.

முதலில் மன்னார் நகர சபையினால் முன்னெடுக்கப்பட்டு வரும் திண்மக்கழிவு முகாமைத்துவ நிலையத்தில் முன்னெடுக்கப்பட்டு வரும் கழிவுகளைக் கொண்டு தயாரிக்கும் இயற்கைப் பசளை தயாரிப்பு முறைகளை நேரடியாக சென்று பார்வையிட்டனர்.

மன்னார் நகர சபை பிரிவில் சேகரிக்கப்படுகின்ற கழிவுப் பொருட்கள் தரம்பிரிக்கப்பட்டு கூட்டுப்பசளை தயாரிக்கப்பட்டு வருகின்றது.

மாதம் 8 ஆயிரம் கிலோ இயற்கை பசளை தயாரிக்கப்படுவதோடு, விற்பனை செய்யப்பட்டும் வருகின்றது.

குறித்த பசளையை மாவட்ட அரசாங்க அதிபர் தலைமையிலான குழுவினர் பார்வையிட்டதோடு, அதன் சரியான தரத்தினை பரிசோதனை செய்ய அனுப்பி வைக்கவுள்ளதாகவும் அரசாங்க அதிபர் திருமதி ஏ.ஸ்ரான்லி டி மெல் தெரிவித்தார்.

குறித்த பசளையில் குறைபாடுகள் எவையும் காணப்பட்டால் அவற்றை நிவர்த்தி செய்து தரமான பசளையை மன்னார் மாவட்ட விவசாயிகளுக்கும், ஏனைய மாவட்டங்களுக்கும் விநியோகம் செய்ய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என அவர் மேலும் தெரிவித்தார்.

அதனைத் தொடர்ந்து மன்னார் கரிசல் பகுதியில் இயற்கை முறையிலான பசளையை பயன்படுத்தி மேற்கொள்ளப்படும் தோட்டச் செய்கையையும் அரசாங்க அதிபர் நேரடியாக சென்று பார்வையிட்டார்.








தென்னாபிரிக்காவைச் சேர்ந்த 37 வயதான பெண்ணொருவர் ஒரே பிரசவத்தில் 10 குழந்தைகளைப் பெற்றெடுத்து உலக சாதனை படைத்துள்ளார். கோசியம் சித்தோலே என்ற இந்தப் பெண்ணுக்கு 7 ஆண் குழந்தைகளும் 3 பெண் குழந்தைகளும் பிறந்துள்ளன. இதற்கு முன்னர் மாலி நாட்டைச் சேர்ந்த பெண்ணொருவர் 9 குழந்தைகளைப் பெற்று சாதனை படைத்திருந்தமை குறிப்பிடத்தக்கது.



இந்தியத் தலைநகர் புதுடில்லியில் பயணக் கட்டுப்பாடு ஓரளவுக்குத் தளர்த்தப்பட்டுள்ளதையடுத்து விவசாயியொருவர் தனது விளைச்சல்களை சந்தைப்படுத்துவதற்குக் காத்திருக்கிறார்.



சீன காட்டுப்பகுதியில் யானைகள் ஓய்வெடுக்கும் காட்சியே இது. யுன்னான் பகுதியில் ட்ரோன் கெமரா மூலம் எடுக்கப்பட்ட இந்தப் படம் உலகளவில் மிகவும் பேசப்படுகின்றது.



இந்தியாவில் மிக வேகமாகப் பரவும் டெல்டா திரிபு (பி.1617.2- இந்திய திரிபு) வயிற்றோட்டம் மற்றும் காதுகேளாமையை ஏற்படுத்துவதாக புதிய ஆய்வுகள் தெரிவித்துள்ளன. புதிய திரிபினால் பாதிக்கப்பட்டோரிடம் மருத்துவர்கள் மேற்கொண்ட ஆய்விலேயே இந்த விடயம் தெரியவந்துள்ளது. இவ்வாறான சூழ்நிலை மேலும் ஆபத்தை விளைவிக்குமென மருத்துவர்கள் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

# பிக்குவைத் தாக்கிய நபரொருவர் கைது

(ஜூட் சமந்த)

பிக்கு ஒருவரைத் தாக்கியதாகக் கூறப்படும் 22 வயது இளைஞர் ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளதாக கருவலகஸ்வெல பொலிஸார் தெரிவித்தனர்.

நேற்று முன்தினம் கருவலகஸ்வெல, 14 ஆவது கட்டைப் பிரதேசத்தில் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

பஹரியகோணம் விகாரையைச் சேர்ந்த பிக்கு ஒருவரினால் பொலிஸாரிடம் முன்வைக்கப்பட்ட முறைப்பாட்டுக்கமைய இந்த சந்தேகநபர் கைதுசெய்யப்பட்டுள்ளார். இவ்வாறு தாக்குதலுக்குள்ளான பிக்கு அளுத்கம பிரதேசத்தில் சிகிச்சை பெற்று வைத்தியசாலையிலிருந்து வெளியேறியுள்ளார்.

நிதி முரண்பாடு காரணமாக இத்தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளமை விசாரணைகளில் இருந்து தெரியவந்துள்ளது. சந்தேகநபரை புத்தளம் நீதவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்த பொலிஸார் நடவடிக்கை மேற்கொண்டுள்ளனர். கருவலகஸ்வெல பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

## வெளிநாட்டுச் சுற்றுலாப் பயணிகளின் நலன் கருதி

# 82 முதல்நிலை ஹோட்டல்களுக்கு மதுவரித் திணைக்களம் விசேட அனுமதி

நாட்டில் நடைமுறையிலிருக்கும் பாதுகாப்பு நிறைந்த முதல்நிலை ஹோட்டல்களில் தங்கியிருக்கும் வெளிநாட்டுச் சுற்றுலாப் பயணிகளின் நலனுக்காக அவர்களைத் தங்க வைத்திருக்கும் காலப்பகுதியில் அந்த ஹோட்டல்களுக்காக வழங்கப்பட்டுள்ள மதுவரித் திணைக்கள அனுமதிப்பத்திரத்தை நடைமுறைப்படுத்துவதற்கு வரையறுக்கப்பட்ட அனுமதியை பெற்றுக்கொடுக்க மதுவரித் திணைக்களத்தினால் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக மதுவரித் திணைக்கள ஆணையாளர் கபில குமாரசிங்க தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பில் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது,

சுற்றுலாத்துறை அமைச்சின் வேண்டுகோளுக்கமைய மதுவரித் திணைக்களத்தினால் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

நாடு பூராகவும் அமுலிலிருக்கும் பயணத்தடை நடைமுறையிலுள்ள காலப்பகுதியில் மாத்திரம் செல்லபடியாகும் வகையில் இந்த அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

அந்த ஹோட்டல்களில் தங்கியிருக்கும் தேசிய சுற்றுலாப் பயணிகள் அல்லது முக்கியஸ்தர்களுக்காக இந்த அனுமதி வழங்கப்படவில்லை என்றும் வழங்கப்பட்டுள்ள சுகாதார ஆலோசனைகளுக்கமையவே குறித்த ஹோட்டல்கள் செயற்பட வேண்டும் என்றும் மதுவரித் திணைக்களம் ஆலோசனை வழங்கியுள்ளது.

இந்த அனுமதி வழங்கலுக்கமைய, மாகாண உதவி மதுவரி ஆணையாளர்கள், அவர்களின் அதிகார பிரதேசத்துக்குட்பட்ட பகுதிகளில் காணப்படும் ஹோட்டல்கள் தொடர்பில் நீதிமன்ற நடவடிக்கையை முன்னெடுப்பதற்கு அவர்களுக்கு ஆலோசனை வழங்கியுள்ளது.

இந்த பாதுகாப்பான முதல்நிலை ஹோட்டல்கள் தொடர்பான பெயர் விபர அறிக்கை இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபையின் உத்தியோகபூர்வ இணையத்தளத்தில் வெளியிடப்பட்டுள்ளதுடன் (sltda.gov.lk), அதற்கமைய நாடுபூராகவும் நடைமுறையிலிருக்கும் 82 சுற்றுலா ஹோட்டல்கள் பெயர் விபர அறிக்கையில் சேர்க்கப்பட்டுள்ளன.



பாகிஸ்தானின் சிந்த் மாநிலத்தில் கடந்த திங்கட்கிழமை அதிவேக ரயில்கள் நேருக்குநேர் மோதியதில் பாரிய விபத்து ஏற்பட்டது. கொவிட் -19 தொற்று காரணமாக இருமுறை தடைப்பட்ட திருமண நிகழ்வொன்றை மூன்றாவது தடவையாக நடத்தச் சென்ற உறவினர்களும் திருமண தம்பதியினரும் உயிரிழந்துள்ள சம்பவம் அப்பகுதி மக்களை கவலையடையச் செய்துள்ளது. இந்த விபத்தில் 61 பேர் பலியானமை குறிப்பிடத்தக்கது.

# 2014இல் தேர்வுப் பரீட்சை எழுதிய ஆசிரியர்களுக்கு இன்னும் நிரந்தர நியமனம் வழங்கப்படவில்லை

ஆசிரியர் உதவியாளர் நியமனத்திற்கு விண்ணப்பிப்பதற்காக 2014 ஆம் ஆண்டு தேர்வு பரீட்சை எழுதிய மத்திய மகாணத்தைச்சேர்ந்த ஆசிரியர்களுக்கு இன்னும் நிரந்தர நியமனம் வழங்கப் படவில்லை என்று அந்த அசிரியர்கள் குற்றஞ்சாட்டியுள்ளனர்.

இதுதொடர்பில் ஆசிரிய உதவியாளர் ச.சதீஷ்குமார் குறிப்பிட்டுள்ளதாவது,

ஆசிரியர் உதவியாளர் நியமனத்திற்கு விண்ணப்பிப்பதற்காக 2014 ஆம் ஆண்டு ஒகஸ்ட் மாதம் 08ஆம் திகதி வெளியான வர்த்தமானியின்படி 2014ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 28ஆம் திகதி தேர்வு பரீட்சை எழுதி அதன் பின்னர் கட்டம் கட்டமாக ஆசிரியர் உதவியாளர் நியமனம் வழங்கப்பட்டது

அதனடிப்படையில், 2015ஆம் ஆண்டு மே மாதம் 19ஆம் திகதி, 2015 ஆம் ஆண்டு செப்டெம்பர் மாதம் 12 ஆம் திகதி, 2015ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 15ஆம் திகதி, 2016 ஆம் ஆண்டு மே மாதம் 16ஆம் திகதி, 2018ஆம் ஆண்டு மே மாதம் 16ஆம் திகதி என 3 ஆயிரத்து 21 ஆசிரியர்களுக்கான நியமனம் பல்வேறு வழிகளில் வழங்கப்பட்டது.

எங்கள் அனைவரதும் நியமன ஒப்பந்தமானது 5 வருடங்களுக்குள் ஆசிரியர் பயிற்சியை நிறைவுசெய்ய வேண்டுமெனவும் அவ்வாறு நிறைவு செய்தால் மாத்திரமே நிரந்தர நியமனம் வழங்கப்படுமெனவும் கூறப்பட்டது. அதனடிப்படையில் முதற்கட்டத்தில் உள்வாங்கப்பட்டவர்கள் பயிற்சியை நிறைவு செய்து நியமனம் பெற்று விட்டனர்.

இரண்டாம் கட்டத்தில் உள்வாங்கப் பட்ட நாங்கள் பயிற்சியை நிறைவு செய்தும் நிரந்தர நியமனத்தைப் பெற முடியாமல் காணப்படுகின்றோம். எம்மோடு பயிற்சி பெற்ற சப்ரகமுவ மாகாணம், ஊவா மாகாணங்களில் கடமையாற்றுபவர்கள் நியமனத்தை பெற்ற போதிலும் மத்திய மாகாணத்தில் மாத்திரம் இவ்வாறு நியமனம் வழங்கப்படவில்லை. இது ஒரு மனித உரிமை மீறல் செயற்பாடாகவே காணப்படுகின்றது. இச்சேவைக்குள் உள்வாங்கப்பட்டு 5 ஆண்டுகள் கடக்கும் இத்தருணத்திலும் நாங்கள் 10,000 ரூபா ஊதியத்தில் சேவையாற்றுகின்றோம்

இதுவரை நாங்கள் பாடசாலைகளில் ஏனைய ஆசிரியர்களுக்கு சமமாகவே கடமையாற்றுகின்றோம்.

எம்மில் பலர், புலமைப்பரிசில் பரீட்சை, க.பொ.த. சாதாரண தரபரீட்சை என்பவற்றில் பல சாதானைகளை புரிந்திருந்தாலும் குறைந்த வருமானத்தில் மன உளைச்சலோடு கடமையாற்றுகின்றோம்.

இலங்கை முழுவதும் கல்வி சட்டங்கள் ஒன்றாகவே காணப்படும் போது ஏனைய மாகாணங்களில் நியமனம் வழங்கும் போது மத்திய மாகாணத்தில் மாத்திரம் நியமனம் வழங்கப்படாமைக்கு காரணம் என்ன? தற்போது மத்திய மாகாணத்தில் கடமையாற்றும் 270 ஆசிரியர் உதவியாளர்களுக்கு தீர்வு கிடைக்குமா? எங்களின் எதிர்காலம் என்னவாகும்?

எங்களைக் கொண்டு இலாப நோக்கம் அடைந்தது போது.ம் இனிமேலும் அவ்வாறு செய்ய முன்வராதீர்கள். எங்களின் நிலைமைகளை கருத்திற் கொண்டு எங்களது பூரணத்துவமான கல்விசேவைக்கு வழிசமைக்க உரியவர்கள் தீர்வை பெற்றுதர முன்வரவேண்டும் என தெரிவித்துக்கொள்கிறோம என்று சுட்டிக்காட்டியுள்ளார்.


# பேருவளையில் 2,500 குடும்பங்களுக்கு உலர் உணவுப் பொருட்கள் வழங்கி வைப்பு



பேருவளைப் பிரதேசத்தில் சமூக, கல்வி, மற்றும் பொருளாதார நலன்புரி செயற்றிட்டங்களை மேற்கொண்டு வரும் பேருவளை Maradana Charity Maradana Charity அமைப்பினால் நேற்று முன்தினம் கொரோனா தொற்றினால் பாதிக்கப்பட்டுள்ள 2 ஆயிரத்து 500க்கும் மேற்பட்ட குடும்பங்களுக்கு உலர் உணவுப் பொதிகள் இலவசமாக வழங்கி வைக்கப்பட்டன.

ஆயசயனயயெ ஊhயசவைல அமைப்பின் தலைவர் அல்ஹாஜ் தஸ்தகீர் பாச்சாவின் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் பேருவளைப் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி லலித் பத்மகுமார விசேட அதிதியாகக் கலந்து கொண்டு உலர் உணவுப் பொதிகளை வழங்கிவைத்தார். மேலும் இந்நிகழ்வில் Maradana Charity அமைப்பின் நிறைவேற்றுக் குழு உறுப்பினர்கள், பிரதேச நலன்விரும்பிகள், தனவந்தர்கள் எனப் பலரும் கலந்துகொண்டு சிறப்பித்தனர்.

இந்நிகழ்வில் பிரதேசத்தில் வாழ்கின்ற முஸ்லிம், சிங்கள, மற்றும் கிறிஸ்தவ குடும்பங்களுக்கு உலர் உணவுப் பொதிகள் வழங்கிவைக்கப்பட்டதுடன் தற்பொழுது நிலவுகின்ற நெருக்கடியான நிலைமையில் வறிய மக்களுக்கு இது மிகுந்த பயனளிக்கும் என்பதுடன், இந்நலன்புரிச் சேவை பிரதேசத்தின் சக வாழ்வினை மேலும் கட்டியெழுப்பும் எனவும் எதிர்பார்க்கப்படுகிறது.



ஐக்கிய நாடுகள் சபையின் செயலாளர் நாயகம் என்டோனியோ குட்டெரஸை இரண்டாவது தடவையாக பதவியில் அமர்த்துவதற்கு பாதுகாப்புச் சபை அனுமதி வழங்கியுள்ளது. அவரது ஐந்து ஆண்டுகள் பதவிக்காலம் எதிர்வரும் டிசம்பர் மாதம் 31 ஆம் திகதியுடன் நிறைவடையவுள்ள நிலையில், இந்த அனுமதி கிடைக்கப்பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.





உடப்பு 5ஆம், 6ஆம் வட்டாரத்திலுள்ள 60 வயதுக்கு மேற்பட்ட ஆண், பெண் இருபாலருக்குமான சினோபார்ம் தடுப்பூசிகள் வழங்கலின் முதல் கட்டம் நேற்று உடப்பு வைத்தியசாலையில் இடம்பெற்றது. இதன்போது 241 பேருக்கான பதிவுகள் இடம்பெற்று தடுப்பூசிகள் வழங்கப்பட்டன. (படங்கள் - உடப்பு நிருபர்)

# சந்தையில் கருவாட்டின் விலை அதிகரிக்கும் வாய்ப்பு!

(ஜூட் சமந்த)

நாட்டில் நிலவும் சீரற்ற காலநிலையினால் கருவாடு உற்பத்தி செய்யும் நடவடிக்கைகள் பாதிப்படைந்துள்ளதாக மீனவர்கள் தெரிவித்துள்ளனர்.

மழையுடனான காலங்களின்போது சிறிய படகுகளில் மீன்பிடிக்கச் செல்வது ஆபத்து என்பதால் அநேகமான மீனவர்கள் மீன்பிடி நடவடிக்கையில் ஈடுபடுவதில்லை. அதனால் மீனவர்கள் அவர்களின் தொழிலை இழக்க வேண்டிய நிலையுள்ளது.

மழைக் காலத்தில் கடலில் உருவாகும் காலப்பகுதிகளில சில மீன் இனங்களை ஆழ்கடலில் பிடிக்கக் கூடியதாக இருக்கும் என்று மீனவர்கள் தெரிவித்துள்ளனர். அந்த மீன் இனங்களைக் கருவாடாக்க முடியும் என்றும், அதனூடாக உயர் வருமானத்தைப் பெற்றுக்கொள்ள முடியும் என்றும் மீனவர்கள் தெரிவித்துள்ளனர்.



அதற்கமைய, ஆழ்கடலில் பிடிக்கப் படும் மீன் இனங்களைக் கருவாடாக்கும் பணிகளைப் பெண்களே செய்கின்றனர். இருந்த போதிலும் தற்போது நிலவும் சீரற்ற காலநிலையினால் அந்த நடவடிக்கைகளும் இடம்பெறுவதில்லை என்றும் தெரிவித்தனர். தற்போதை நிலைமைக்கமைய, சந்தைகளில் கருவாட்டுக்கான விலை அதிகரிப் பதற்கான வாய்ப்புள்ளதாகவும் அவர்கள் குறிப்பிட்டுள்ளனர்.



# டெஸ்ட் சம்பியன்ஷிப் இறுதிப்போட்டிக்கான நடுவர்கள் குழாம் அறிவிப்பு

சர்வதேச கிரிக்கெட் பேரவையானது முதல் தடவையாக அறிமுகப்படுத்திய ஐ.சி.சி. உலக டெஸ்ட் சம்பியன்ஷிப் தொடரின் மாபெரும் இறுதிப் போட்டியானது எதிர்வரும் 18ஆம் திகதி தொடக்கம் 22ஆம் திகதி வரை விராட் கோஹ்லி தலைமையிலான இந்திய அணிக்கும், கேன் வில்லியம்சன் தலைமையிலான நியூஸிலாந்து அணிக்குமிடையில் இங்கிலாந்தின் சவுதம்டன் நகரில் நடைபெறவுள்ளது.

முதல் டெஸ்ட் சம்பியன்ஷிப் பட்டத்தைக் கைப்பற்றப் போவது யார் என்பதை முழு உலகமும் எதிர்பார்த்திருக்கும் நிலையில், குறித்த இறுதிப்போட்டியில் பணியாற்றவுள்ள நடுவர்கள் குழாமின் பெயர்கள் சர்வதேச கிரிக்கெட் பேரவையினால் வெளியிடப்பட்டுள்ளன. அதன்படி, போட்டியின் கள நடுவர்களாக ரிச்சர்ட் இல்லிங்வேர்த் மற்றும் மிட்செல் கொஹ் ஆகியோர் பணியாற்றவுள்ளதுடன், மூன்றாவது நடுவராக ரிச்சர்ட் கெட்டில்ப்ரோஹ் பணியாற்றவுள்ளார்.

போட்டியின் மத்தியஸ்தராக கிறிஸ் ப்ரோட் செயற்படவுள்ளதுடன், நான்காவது நடுவராக அலெக்ஸ் வார்ஃப் செயற்படுவார் என சர்வதேச கிரிக்கெட் பேரவை அறிவித்துள்ளது.




# பிரெஞ்ச் பகிரங்க டென்னிஸ்



## முதல் அரையிறுதியில் சிட்சிபாஸ் – ஸ்வெரோவ் இன்று பலப்பரீட்சை

பிரான்ஸ் நாட்டின் தலைநகர் பெரீஸில் நடைபெற்றுவருகின்ற உலகின் கிராண்ட்ஸ்லாம் அந்தஸ்து பெற்ற டென்னிஸ் தொடர்களில் ஒன்றான பிரெஞ்ச் பகிரங்க டென்னிஸ் தொடரின் ஆடவர் ஒற்றையர் பிரிவில் இன்று நடைபெறுகின்ற முதல் அரையிறுதிப் போட்டியில் கிரீஸ் நாட்டைச் சேர்ந்த ஸ்டெபனோஸ் சிட்சிபாஸ் மற்றும் ஜேர்மனி நாட்டை சேர்ந்த அலெக்ஸாண்டர் ஸ்வெரோவ் ஆகியோர் பலப்பரீட்சை நடத்தவுள்ளனர்.

காலிறுதி ஆட்டம் ஒன்றில் ஸ்டெபனோஸ் சிட்சிபாஸ், ரஷ்யாவை சேர்ந்த டேனில் மெத்வதேவை சந்தித்தார். இதில் 6-3, 7-6, 7-5 என்ற நேர் செட் கணக்கில் அலெக்ஸாண்டர் ஸ்வெரோவ் வெற்றிபெற்று அரையிறுதிக்கு முன்னேறினார்.



மற்றொரு காலிறுதி ஆட்டத்தில் ஜேர்மனியைச் சேர்ந்த அலெக்ஸாண்டர் ஸ்வெரோவ் - ஸ்பெயினை சேர்ந்த டேவிடோவிச் போகினாவுடன் மோதினார். இதில் சிறப்பாக ஆடிய அலெக்ஸாண்டர் ஸ்வெரோவ் 6-4, 6-1, 6-1 என்ற நேர் செட் கணக்கில் இலகுவாக வென்று அரையிறுதிக்கு முன்னேறினார். பிரெஞ்ச் பகிரங்க டென்னிஸ் தொடரின் அரையிறுதிக்கு அலெக்ஸாண்டர் ஸ்வெரோவ் முதன்முறையாக முன்னேறியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# டோக்கியோ ஒலிம்பிக் 2020; பயணக்கட்டுப்பாடுகளை தளர்த்திய அமெரிக்கா




கடந்த வருடம் நடைபெறவிருந்த ‘டோக்கியோ ஒலிம்பிக் 2020’ போட்டிகள், கொரோனா வைரஸ் தாக்கம் காரணமாக இந்த ஆண்டுக்கு ஒத்திவைக்கப்பட்ட நிலையில், இப்போட்டிகள் எதிர்வரும் ஜூலை மாதம் 23ஆம் திகதி முதல் ஓகஸ்ட் மாதம் 8ஆம் திகதி வரை நடைபெறவுள்ளன. ஒலிம்பிக் போட்டிகளைத் தொடர்ந்து பரா ஒலிம்பிக் போட்டிகள் ஓகஸ்ட் 24ஆம் திகதி முதல் செப்டெம்பர் 5ஆம் திகதி வரை நடைபெறவுள்ளன.

கடந்த மே மாதம் 25ஆம் திகதி அமெரிக்க அரசாங்கமானது, கொரோனா வைரஸ் தாக்கத்தை கருத்தில் கொண்டு ஜப்பான் நாட்டிற்கான பயணக்கட்டுப்பாடுகளை விதித்திருந்தது. இதன் காரணமாக டோக்கியோ ஒலிம்பிக்கில் அமெரிக்கா பங்கேற்குமா என்ற கேள்வி பரவலாக எழுந்தது. இந்நிலையில், ஜப்பானில் நடைபெறவுள்ள ஒலிம்பிக் போட்டிகளை முன்னிட்டு, விதிக்கப்பட்ட கட்டுப்பாடுகளை அமெரிக்கா தளர்த்தியுள்ளது.

# மே மாதத்தின் சிறந்த வீரருக்கான பரிந்துரையில் இலங்கை வீரர் ப்ரவீன்




2021 ஜனவரி மாதத்திலிருந்து சர்வதேச கிரிக்கெட் பேரவையினால் புதிதாக அறிமுகப்படுத்தப்பட்ட மாதத்திற்கு ஒரு சிறந்த வீரர் மற்றும் வீராங்கனையை தெரிவுசெய்வதற்கான வாக்கெடுப்பின் அடிப்படையில், மே மாதத்திற்கான சிறந்த வீரர் மற்றும் வீராங்கனையைத் தெரிவுசெய்வதற்காக சர்வதேச கிரிக்கெட் பேரவையினால் ஆடவர் பிரிவில் மூவரின் பெயர்கள் பரிந்துரை செய்யப்பட்டுள்ளதுடன், மகளிர் பிரிவிலும் மூன்று வீராங்கனைகளின் பெயர்கள் பரிந்துரை செய்யப்பட்டுள்ளன.

அதனடிப்படையில், ஆடவருக்கான சிறந்த வீரரைத் தெரிவுசெய்வதற்காக பரிந்துரை செய்யப்பட்ட வீரர்களாக இலங்கை அணியின் இளம் சுழற்பந்து வீச்சாளரான ப்ரவீன் ஜயவிக்ரம, பாகிஸ்தான் அணியின் வேகப்பந்து வீச்சாளர் ஹஸன் அலி, பங்களாதேஷ் அணியின் விக்கெட் காப்பாளர் முஸ்பிகூர் ரஹீம் ஆகியோர் காணப்படுகின்றனர்.

இலங்கை அணியின் சுழற்பந்து வீச்சாளரான ப்ரவீன் ஜயவிக்ரம அண்மையில் பங்களாதேஷ் அணியுடன் நடைபெற்ற டெஸ்ட் தொடரில் தனது அறிமுகப் போட்டியிலேயே 11 விக்கெட்களை வீழ்த்தி சாதனை படைத்திருந்தார். அதன்படி குறித்த விருதுக்காக பரிந்துரை செய்யப்பட்ட முதல் இலங்கை வீரராகவும் அவர் இடம்பெற்றுள்ளார்.

அதேபோன்று மகளிருக்கான சிறந்த வீராங்கனையை தெரிவுசெய்வதற்கான பரிந்துரையில் அயர்லாந்து வீராங்கனைகளான கேபி லுவிஸ் மற்றும் லியா போல், ஸ்கொட்லாந்து வீராங்கனையான கேத்ரின் பிரைஸ் ஆகியோர் பரிந்துரை செய்யப்பட்டுள்ளனர்.

கிரிக்கெட் ரசிகர்களினால் இணையவழி மூலமாக வாக்கெடுப்பு நடத்தப்பட்டு மே மாதத்தின் சிறந்த வீரர் மற்றும் வீராங்கனை ஆகியோர் அறிவிக்கப்படுவர். கடந்த நான்கு மாதங்களில் ஆடவர் பிரிவின் சிறந்த வீரர்களாக ரிஷப் பண்ட் (ஜனவரி), ரவிச்சந்திரன் அஷ்வின் (பெப்ரவரி), புவனேஷ்வர் குமார் (மார்ச்), பாபர் அஸாம் (ஏப்ரல்) ஆகியோர் தெரிவுசெய்யப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.




# ஒல்லி றொபின்சனை தொடர்ந்து சிக்கலுள்ள மற்றுமொரு வீரர்

## இங்கிலாந்து கிரிக்கெட் சபை தகவல்

இங்கிலாந்து கிரிக்கெட் அணியின் இளம் வேகப்பந்து வீச்சாளரான ஒல்லி ரொபின்சன் சிறு வயதில் இனவெறிக் கருத்தைத் தெரிவித்ததற்காக சர்வதேச கிரிக்கெட் போட்டிகளில் விளையாட இங்கிலாந்து கிரிக்கெட் சபை தற்காலிகத் தடை விதித்துள்ளது. வேகப்பந்து வீச்சாளரான ஒல்லி ரொபின்சன் சுமார் 8 வருடங்களுக்கு முன்னர் ட்விட்டரில் இனவெறியைத் தூண்டும் வகையிலும், பாலியல் ரீதியாகவும் சில கருத்துக்களைத் தெரிவித்திருந்தார்.

இதற்கான ஒல்லி ரொபின்சன் தற்போது மன்னிப்புக் கோரியிருந்தாலும், அதனை ஏற்றுக்கொள்ளாத இங்கிலாந்து கிரிக்கெட் சபை அவருக்கு தற்காலிகத் தடை விதித்துள்ளது. இந்நிலையில் மேலும் ஒரு இங்கிலாந்து வீரர் சிறு வயதில் இனவெறிக் கருத்தை வெளியிட்டிருப்பது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. அப்போது அவருக்கு 16 வயதுதான் இருக்கும் என்று கூறப்படுகிறது.

இருப்பினும் அவரின் பெயர் இன்னும் வெளியிடப்படவில்லை. இதுகுறித்து அறிக்கை வெளியிட்டுள்ள இங்கிலாந்து கிரிக்கெட் சபை, “ஒல்லி ரொபின்சனைத் தொடர்ந்து மற்றொரு இங்கிலாந்து வீரரும் இனவெறிக் கருத்தை ட்விட்டரில் பதிவுசெய்திருப்பது தெரிய வந்துள்ளது. விரைவில் முழு விபரமும் வெளியாகும்'' என்று தெரிவித்துள்ளது.

# மெஸ்ஸியை பின்தள்ளி இரண்டாமிடத்துக்கு முன்னேறிய இந்திய வீரர் சுனில் ஷேத்ரி



இந்திய கால்பந்து அணியின் நட்சத்திர வீரரான சுனில் ஷேத்ரி சர்வதேச அளவில் அதிக கோல்கள் அடித்த நடப்பு வீரர்களின் பட்டியலில் அர்ஜென்டினாவின் உலகளாவிய நட்சத்திர வீரரான லயோனல் மெஸ்ஸியை பின்னுக்குத்தள்ளி இரண்டாவது இடத்துக்கு முன்னேறியுள்ளார்.

2022ஆம் ஆண்டு நடைபெறவுள்ள பீபா உலகக்கிண்ணக் கால்பந்துத் தொடருக்கான ஆசிய கண்டத்தின் தகுதிகாண் சுற்று போட்டிகள் தற்போது நடைபெற்றுவரும் நிலையில், பங்களாதேஷ் அணிக்கெதிராக நடைபெற்ற போட்டியின்போது 36 வயதாகும் இந்திய வீரர் சுனில் ஷேத்ரி இரண்டு கோல்களை அடித்ததன் மூலம் இவ்வாறு லயோனல் மெஸ்ஸியைப் பின்தள்ளியுள்ளார்.

போர்த்துக்கல் நாட்டின் நட்சத்திர கால்பந்து வீரரான கிறிஸ்டியானோ ரொனால்டோ 103 கோல்கள் அடித்து முதலிடம் வகிக்கிறார். தற்போது இந்திய வீரர் சுனில் ஷேத்ரி 74 கோல்களை அடித்து இரண்டாமிடத்திலும், லயோனல் மெஸ்ஸி 72 கோல்கள் அடித்து மூன்றாமிடத்திலும் காணப்படுகின்றனர்.

குறித்த போட்டியில் இந்திய அணி 2-0 என்ற கோல்கள் கணக்கில் வெற்றிபெற்றதன் மூலம், உலகக்கிண்ண தகுதி சுற்றில் கடந்த 6 வருடங்களின் பின்னர் பெற்ற முதல் வெற்றியாகவும், வெளிநாட்டில் கடந்த 20 வருடங்களில் கிடைத்த முதல் வெற்றியாகவும் அமைந்தது.



இங்கிலாந்து அணியுடன் மட்டுப்படுத்தப்பட்ட ஓவர்கள் கொண்ட தொடரில் பங்கேற்கும் குசல் பெரேரா தலைமையிலான இலங்கை அணி நேற்று அதிகாலை கட்டுநாயக்க விமான நிலையத்திலிருந்து இங்கிலாந்தின் பேர்மிங்ஹம் நகர் நோக்கிப் புறப்பட்டபோது...